பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 18 | புதன்கிழமை | 30.04.2025 | அதிர்வு 269

## தேர்தல் பிரச்சாரப் புயலாக மாறவுள்ள மே தினக் கூட்டம்



நாளை மே தினக் கூட்டம் மற்றும் பேரணியைப் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்குரிய

06



# எதிர்பார்த்த முன்னேற்றம் நடைமுறையில் இல்லை!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் விசனம்



2025ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லை எனச் சுட்டிக் காட்டியவடக்குமாகாணஆளுநர்நா.வேதநாயகன்,அமைச்சின்செயலாளர்கள்,திணைக்களத் தலைவர்கள் ஒதுக்கப்பட்ட நிதியை ஒதுக்கிய திட்டங்களுக்கு உரிய காலப்பகுதிக்குள் செலவு செய்து முடிக்க வேண்டியது பொறுப்பு எனவும் குறிப்பிட்டார்.

திட்டங்களை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தி முடிக்காமல் அதற்குச் சாட்டுப்போக்குச் சொல்ல வேண்டாம் எனவும் அவர் தெரிவித்தார்.

06

# ரணில் மீது தேசிய மக்கள் சக்தி அரசு கை வைக்காது!

## அவரின் புண்ணியத்தால்தான் அநுர ஜனாதிபதியானார் என்று சஜித் அணி கூறுகின்றது

"ரணில் இல்லையேல் அநுர ஜனாதிபதி பதவிக்கு வந்திருக்கமாட்டார். எனவே, ரணில் மீது தேசிய மக்கள் சக்தி அரசு கை வைக்கும் என நான் நம்பவில்லை."

– ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

இலஞ்ச, ஊழல் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ரணில் விக்கிரமசிங்க வரவழைக்கப்பட்டமைதொடர்பில்ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

06






அவர் ஒரு வயது போன அம்மா. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பாடசாலையில் பதில் அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். வெட்டு ஒன்று துண்டு இரண்டாக நச்சென்று பேசுவார். ஆயினும் நீண்ட காலமாக எனது வாசகர். காணும் இடங்களில் என் எழுத்துக்கள் குறித்து மெச்சியும் பேசுவார். திட்டியும் தள்ளுவார் – தாய் போன்ற உரித்துடன்.

எங்கேயோ என் தொலைபேசி இலக்கம் பெற்று, நேற்று எனக்குத் திடீரென அழைப்பு எடுத்தார். எடுத்த எடுப்பிலேயே வசவுகள் தொடங்கின.

"நீ என்ன பத்திரிகைக்காரன்...? ஒன்றுக்கும் லாயக்கற்றவன்...!" என்றார் அவர்.

என்ன, ஏது என்று விசாரிக்க முற்பட்டேன்.

"முதலிலே நீ உன் வீட்டுக்கு கடைக்குப் போய் சாமான்கள் வாங்கிக் கொடுப்பாயா என்று சொல்லு...?" – எனக் கேட்டார் அவர்.

"ஆம். அவ்வப்போது செய்வது உண்டு." – என்றேே நான்.

"பத்திரிகையாளனாக

06





# கொம்பனித்தெரு மேம்பால நிர்மாணப் பணி தாமதமானதால் 400 மில்லியன் ரூபா நட்டம்


கொம்பனித்தெரு காவல்நிலையத்திற்கு அருகில் உள்ள பாலதக்ஷ மாவத்தையிலிருந்து கொழும்பு சித்தம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை வரை மேம்பால நிர்மாணிப்பு பணிகள் தாமதமாகியதன் காரணத்தால் ஒப்பந்ததாரர்களுக்குத் தாமதக் கட்டணமாக 400 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான நிதியைச் செலுத்த வேண்டியுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நிர்மாண பணிகளின் தாமதம் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக அந்த இடத்தில் நேற்று முன்தினம் கள ஆய்வு ஒன்றை மேற்கொண்ட போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அந்த இடத்திலுள்ள காவல்துறைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லம் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யும் போது எழுந்த பிரச்சினையின் காரணத்தால் இரண்டு வருடங்களாக இந்தப் பால நிர்மாணப் பணிகள் தாமதமாகியுள்ளன.

# ஜனாதிபதி தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த குற்றச்சாட்டை மறுத்தார் நளிந்த





லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அனுப்பிய கடிதத்தை ஜனாதிபதி பார்வையிட்டார் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த குற்றச்சாட்டுக்கு அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மறுப்பு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க மீதான குற்றச்சாட்டு குறித்து தாம் தெரிவித்த கருத்து தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவில் முன்னிலையானார்.

அங்கு வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் அவர் வெளியிட்ட விசேட அறிக்கையொன்றில், லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் முன்னதாக தமக்கு அழைப்பு விடுக்கப்பட்ட திகதியில் வாக்குமூலம் வழங்குவதற்கு வருகைதர முடியாமைக்கான காரணத்தை அறிவித்து, அந்த ஆணைக்குழுவுக்கு அனுப்பிய கடிதத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பார்வையிட்டார் என குற்றஞ்சாட்டியிருந்தார்.

தாம் அனுப்பிய கடிதம் தொடர்பில் ஜனாதிபதி பொதுக் கூட்டமொன்றில் தெரிவித்தார் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

சுயாதீன ஆணைக்குழுவொன்றின் உள்ளக விவகாரங்களில் ஜனாதிபதி இவ்வாறு தலையீடு செய்வது, அந்த ஆணைக் குழுவின் நடுநிலை தன்மை தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இன்றைய செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போது, அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்த குற்றச்சாட்டுக்களை மறுத்திருந்தார்.

லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு முன்னதாக அறிவித்த திகதியில் முன்னிலையாக முடியாது எனவும், அதற்கான காரணத்தையும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது சமூக ஊடக பக்கத்தில் வெளியிட்டிருந்தார் என அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

அந்த சமூக ஊடக பதிவுகளில் வெளியான பொதுவானதொரு தகவலை மையப்படுத்தியே ஜனாதிபதி பொதுக்கூட்டத்தில் கருத்துகளை வெளியிட்டிருக்கக்கூடும் எனவும், லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கு எந்த தகவலும் வழங்கப்படவில்லை எனவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்

# சில சட்டங்களை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது



பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் விடயதானத்துக்குரிய புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும், தற்போதுள்ள சில சட்டங்களை திருத்தம் செய்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அதற்கமைய, பெருந்தோட்ட முகாமைத்துவ சட்டம் என்ற புதிய சட்டமும், துருசவிய நிதியத்தின் அதிகாரங்களை இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கான புதிய சட்டமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள் கட்டுப்பாட்டு சட்டம், சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற சட்டம், தேயிலைச் சக்தி நிதியச் சட்டம் உள்ளிட்ட சில சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.




# உலகின் மிகப்பெரிய கொள்கலன் கப்பல் எம்.எஸ்.சி. மரியெல்லா இலங்கை வருகை

உலகின் மிகப்பெரிய கொள்கலன் கப்பல்களில் ஒன்றான எம்.எஸ்.சி.மரியெல்லா நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை வந்தடைந்தது.

மேற்கு ஆப்பிரிக்காவின் லைபீரியாவைச் சேர்ந்த அந்த கப்பலானது, 399.90 மீற்றர் நீளமும் 61.30 மீற்றர் அகலமும் கொண்டது.

இந்தக் கப்பல் 24,246 கொள்கலன்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது என்று கூறப்படுகிறது.

இந்தநிலையில், எம்.எஸ்.சி. மரியெல்லாவின் வருகை இலங்கையின் கடல்சார் துறையில் ஒரு தனித்துவமான மைல்கல் என இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# தெஹிவளை விலங்கியல் பூங்காவுக்கு புதிய விலங்குகளை கொண்டுவர திட்டம்

விலங்கு பரிமாற்ற திட்டத்தின் கீழ், தெஹிவளை விலங்கியல் பூங்காவுக்கு பல புதிய விலங்குகள் கொண்டு வரப்படவுள்ளதாக தேசிய விலங்கியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக, விலங்கியல் பூங்காவுக்கு விரைவில் மூன்று வரிக்குதிரைகள், இரண்டு ஜோடி ஒட்டகச்சிவிங்கிகள், பிரான்சிலிருந்து மூன்று அனகொண்டாக்கள், மாண்டரின் வாத்துகள் மற்றும் இரண்டு பெரிய ஆமைகள் வழங்கப்படவுள்ளன என குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு ஈடாக, தேசிய விலங்கியல் திணைக்களம் இரண்டு ஜோடி டோக் மக்காக் குரங்குகள், ஒரு ஜோடி மர அணில்கள், ஒரு ஜோடி நீர் யானைகள், ஒரு ஜோடி மீன்பிடி பூனைகள், ஒரு பச்சை விரியன் பாம்பு மற்றும் ஒரு கண்ணாடி விரியன் பாம்பு ஆகியவற்றை பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அந்தந்த நாடுகளுக்கு அனுப்பியுள்ளது.




அருகிவரும் மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களுக்கான பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க முயற்சிகளை ஆதரிக்கும் அதேவேளை, தெஹிவளை விலங்கியல் பூங்காவில் உயிரின பன்முகத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய விலங்கியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



# தேசிய வெசாக் தின நிகழ்வை நுவரெலியாவில் நடத்த தீர்மானம்

2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வெசாக் தின நிகழ்வை நுவரெலியாவில் நடத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சவை பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தேசிய வெசாக் தின நிகழ்வுகளை நுவரெலியாவில் உள்ள சர்வதேச பௌத்த நிலைய விகாரையை மையமாகக் கொண்டு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய வொசாக் தின நிகழ்வு அடுத்த மாதம் 10 முதல் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

# இலங்கை போக்குவரத்து சபையின் முன்னாள் உப தலைவருக்கு பிணை

இலங்கை போக்குவரத்து சபையின் முன்னாள் உப தலைவர் எல்.ஏ.விமலரத்னவை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் திஸ்ஸமஹறாம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதையடுத்து இந்த பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை 50 லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக 6 மாதங்களுக்கு ஒருதடவை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கதிர்காமம் பகுதியிலுள்ள ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு சொந்தமானது என கூறப்படும் வீடு குறித்து முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் முன்னாள் உப தலைவர் அம்பலாந்தோட்டை – மாமடல பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று காலை அவர் கைது செய்யப்பட்டார்.

மேற்படி வீட்டின் நிர்மாணத்திற்கு சந்தேகநபர் முழுமையான தலையீடு செய்துள்ளதுடன் நிதிதூய்தாக்கல் தடுப்புச்சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்துள்ளது.




# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பிவைப்பு

நாடாளுமன்றத்தில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தலின்படி ஜனாதிபதி அலுவலகத்தால் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

25 ஆண்டுகளுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை தொடர்பில் அடுத்த கட்ட முன்னெடுப்புகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, குறித்த அறிக்கை நேற்று சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

# சுற்றுலாப் பயணிகளில் ஐவரில் ஒருவர் இந்தியர்

ஏப்ரல் மாதத்தில் வந்த மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஐவரில் ஒருவர் இந்தியர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஏப்ரல் மாதத்தின் முதல் 24 நாட்களில் இலங்கைக்கு வந்த 144,320 வெளிநாட்டினரில் 29,763 பேர் இந்தியர்கள் எனவும், இது மொத்த சுற்றுலா பயணிகளின் வருகையில் 20.6 சதவீதம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்திற்கான அண்மைய புள்ளி விபரங்களுக்கமைய, இந்த ஆண்டில் இதுவரையில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 866,596 ஆக அதிகரித்துள்ளது.






உலகத் தொழிலாளர்களே ஒன்றுசேருங்கள் !
பொருளாதார நெருக்கடிகளுக்கும்,
தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கும்
தீர்வுகளை வலியுறுத்தும்...

## மே தினப் பொதுக் கூட்டம்

**தலைமை**

தோழர் கா.செல்வம் கதிர்காமநாதன்
வட பிராந்தியச் செயலாளர்
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி

**உரை நிகழ்த்துவோர்**

தோழர்கள்

சி.கா.செந்திவேல்
பொதுச் செயலாளர் - பு.ஜ.மா.லெ.கட்சி

வெ.மகேந்திரன்
தேசிய அமைப்பாளர் - பு.ஜ.மா.லெ.கட்சி

க.தணிகாசலம்
அரசியல் குழு உறுப்பினர் - பு.ஜ.மா.லெ.கட்சி

டேவிட் சுரேன்
மலையகப் பிராந்தியச் செயலாளர் - பு.ஜ.மா.லெ.கட்சி

என்.பிரசாந்தினி
பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு

பஸ்மிர் புஹாரி
அமைப்பாளர்

கே.சிந்தீசன்
புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி

பா.இரத்தினேஸ்வரி
பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு

ந.பிரதீபன்
அரசியல் குழு உறுப்பினர்
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி

கு.சாரங்கன்
புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி

**இசை நிகழ்வு – புரட்சிகரப் பாடல்கள்**

மேதினத்தில் அணிதிரள்வோம் !! உழைக்கும் மக்களின் நியாயமான குரல்களை உயர்த்தி நிற்போம் !

**புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி**
(NDMLP)

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீ கிழித்துத்தான் விட்டாய்!" – என்று சீறிய அவர் அதற்குப் பின் சொன்ன விடயங்கள் காத்திரமானவை. கவனிக்க வேண்டியவை.

"வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து, வரிகட்டி விற்பனைக்கு வரும் ஒரு கிலோ சீனி யாழ்ப்பாணத்தில் 220 ரூபா. ஆனால் உள்நாட்டில் கடற்கரையில் விளையும் உப்பு கிலோ 320 ரூபா. இதுதானா திசை காட்டி கொண்டு வந்த மாற்றம்? இது பற்றி ஏதாவது உன் பத்திரிகையில் எழுதினாயா?"– என்று பாய்ந்தார் அந்த அம்மணி.

"கடந்த மாதம் வரை கிலோ 160 ரூபாவுக்கு விற்பனையான உருளைக்கிழங்கு இப்போது விலை 220 ரூபா. தேங்காய் எண்ணெய் எவ்வளவு தெரியுமா? தேங்காய்த் தட்டுப்பாட்டுக்கு மத்தியிலும் லீற்றர் 750 ரூபாவுக்கு விற்கப்பட்டது. தற்போது அது ஆயிரம் ரூபா தாண்டிவிட்டது. 2024 இல் கிலோ 100 ரூபாவுக்கு விற்ற உப்பு டிசம்பரில் 120 ரூபாவானது. ஜனவரியில் 150 ரூபா. பெப்ரவரியில் 185 ரூபா. இப்போது 320 ரூபா. முழு நாடுமே ஒரு தீவு. சுற்றிவரக் கடல். போதாக்குறைக்கு வடக்கில் உப்பு விளையும் குடாக்கடலும் உண்டு. வடக்கில் மட்டும் சுமார் 280 கிலோமீட்டர் நீளத்துக்கு கடற்கரையோரம் இருக்கிறது. ஆனால் இங்கு உப்பின் விலை கிலோ 320 ரூபா. அதுவும் சீனியின் விலையை விட நூறு ரூபா அதிகம். இந்த மாற்றத்திற்குத் தானா நாங்கள் எல்லோரும் வாக்களித்தோம்?" – என்று பாய்ந்தார் அவர்.

அவர் கேள்விகளில் நியாயம் இருப்பதாகவே எனக்குப் பட்டது.

இத்தகைய சாதாரண மக்களின் சீற்றம் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் நிச்சயம் எதிரொலிக்கும் என்று நம்புகிறேன்.

\+ + +

வடக்கில் அதிகம் துள்ளிக் குதிக்கும் அமைச்சர் ஒருவர் தொடர்பில் அரசு தலைமைக்கு அடுத்தடுத்து முறைப்பாடுகள் பறந்து கொண்டிருக்கின்றன எனப் பேசப்படுகிறது உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்ததும் பெரும் அமைச்சரவை மாற்றும் ஒன்று காத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

சிக்கலுக்குரிய அமைச்சர் கடலில் இருந்து இன நல்லிணக்க அமைச்சுக்கு தூக்கி அடிக்கப்பட வாய்ப்புகள் இருப்பதாக அரச உயர் வட்டாரங்களில் தகவல்கள் கசியத் தொடங்கி இருக்கின்றன.

தேர்தல்கள் முடிந்ததும் – பெரும்பாலும் இன்னும் பத்து நாள்களில் – இந்த மாற்றம் வரலாம் என்று கூறப்படுகிறது. மக்களின் முடிவும் தேர்தலில் பிரதிபலிக்க, குருவி இருக்கப் பனங்காய் விழுந்த கதையாக விவகாரம் மாறுமென நினைக்கிறேன்.

## தேர்தல் பிரச்சாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பாடுகளைப் பிரதான கட்சிகள் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன.

மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குரிய பிரச்சாரப் போர் எதிர்வரும் 3 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்கு வரவுள்ளது.

எனவே,மேதினக்கூட்டத்தைப்பிரமாண்டமான தேர்தல் கூட்டமாக இம்முறை கட்சிகள் நடத்தவுள்ளன.

இதற்கமைய தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் இணைந்து தலவாக்கலையில் மே தின நிகழ்வுகளை நடத்துகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மொரட்டுவையில் மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

அதேவேளை, வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளும் வடக்கு, கிழக்கை மையப்படுத்தி மே தினக் கூட்டம் மற்றும் பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளன.

## ரணில் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புண்ணியத்தால்தான் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியானார். ரணில் இல்லையேல் அநுர இந்தப் பதவிக்கு வந்திருக்கமாட்டார். எனவே, பிரச்சார மேடைகளில் கூறப்படுவது போல் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என நாம் நம்பவில்லை. என்ன நடக்கின்றது எனப் பொறுத்திருந்து பார்ப்போம்." – என்றார்.

## எதிர்பார்த்த முன்னே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்ட மீளாய்வுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், "நடப்பு ஆண்டின் மூன்றிலொரு காலம் நிறைவடைந்துள்ள நிலையில் திட்டங்களின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லாமல் உள்ளது.

எமது மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகச் செலவு செய்வதுடன் அடுத்த ஆண்டு அதிகளவு நிதியைக் கோரவேண்டும்.

அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களது தலைமைத்துவத்தில்தான் இந்தத் திட்டங்களின் நடைமுறையாக்கத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது.

கடந்த மீளாய்வுக் கூட்டத்தில் தெரிவித்ததைப்போல திட்டங்களின் நடைமுறையாக்கங்களை செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிடுவதுடன், இரு வாரங்களுக்கு ஒரு தடவை மீளாய்வுக் கூட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

திட்டங்களுக்கான ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்யும்போது அவதானம்



தேவை. குறைந்த விலையில் கேள்வி கூறலைச் சமர்பித்து ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதை நடைமுறைப்படுத்தாமல் விட்டுவிடுவார்கள்.

தவறிழைக்கும் ஒப்பந்தகாரர்களைக் கறுப்புப் பட்டியலில் உள்வாங்க வேண்டும் என்பதைப் பல தடவைகள் சொல்லியுள்ளேன். அதை நடைமுறைப்படுத்த வேண்டியது பிரதிப் பிரதம செயலாளர் – பொறியியல் சேவைகளின் பொறுப்பு. அதைச் செய்வதன் ஊடாகவே எதிர்காலத்திலாவது பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும்." – என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் – நிதி எஸ்.குகதாசன், நிதி முன்னேற்றம் தொடர்பில் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள் ரீதியாகத் தெரியப்படுத்தினார்.

கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கோரிய அவர், கட்டுநிதி விடுவிப்புத் தொடர்பில் தாமதங்கள் ஏதுமில்லை எனக் குறிப்பிட்டார். அதேபோல் மாகாணத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட வரி வருவாய் உரியவாறு காலாண்டுக்குரியது கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள நிலையான வைப்பு நிதியை அந்தப் பிரதேசங்களின் சிறிய அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய ஆளுநர், வருமானம் குறைந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாகாணத்தின் நிதியை வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

நிரல் அமைச்சுக்கள் திட்ட முன்மொழிவுகளை முன்வைத்தால் நிதியை விடுவிக்கத் தயாராகவுள்ள நிலையில் தேவையான திட்டங்களைச் சமர்பித்து நிதியைப் பெற்று நடைமுறைப்படுத்துமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

இதன் பின்னர் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் – திட்டமிடல் எம்.கிருபாசுதன் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள் ரீதியாகத் தெளிவுபடுத்தினர்.

2025 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண சபையின் நிதிக்கூற்று அறிக்கை புத்தகம் இந்தக் கூட்டத்தில் வைத்து வடக்கு மாகாண ஆளுநரிடம், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் – நிதி அவர்களால் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, இந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில், வடக்கு மாகாணத்தில் தற்போது முருங்கை மற்றும் மாம்பழச் செய்கையில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கம் தொடர்பிலும் ஆராயப்பட்டது. அது தொடர்பில் ஆராய்ச்சிகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்த ஆளுநர், புதிய இனங்களை அறிமுகப்படுத்தும்போது பாரம்பரிய இனங்களை அழிவடையாமலும் பார்த்துக்கொள்வது விவசாயத் திணைக்களத்தின் பொறுப்பு எனக் குறிப்பிட்டார்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




# ஆனைவிழுந்தான் தொழில்நுட்பக் கல்லூரியை விடுவிக்க இந்த அரசாவது நடவடிக்கை எடுக்குமா?

## தமிழரசின் எம்.பி. சிறீதரன் கேள்வி

“போர்க்காலம், சமாதான காலம் என்ற நிலைமாறுதல்கள் எல்லாவற்றையும் கடந்து, கல்வி, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் தளங்களைச் சமநிலையில் மேலுயர்த்திய விடுதலைப் புலிகளின் காலத்தில், கிளிநொச்சி மண்ணின் அடையாளங்களுள் ஒன்றாக இருந்த ஆனைவிழுந்தான் தொழில்நுட்பக் கல்லூரியை இராணுவத்திடமிருந்து விடுவித்து, மீள இயக்குவதற்கு இந்த அரசாவது நடவடிக்கை எடுக்குமா?”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பாட்டியிடும் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து வன்னேரிக்குளம் வட்டாரத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

தமிழரசுக் கட்சியின் வன்னேரிக்குளம் வட்டாரக் கிளைத் தலைவர் தியாகராசா செந்தூரன் தலைமையில் ஆனைவிழுந்தானில் நடைபெற்ற கூட்டத்தில் வேட்பாளர்கள் உரையாற்றியிருந்ததுடன், பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## போராட்டங்களுக்கு வெற்றி

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தொடர்பில் ஆட்சித்தரப்புகளினால் தொடர்ந்து புரியப்பட்டு வரும் மிக மோசமான - கொடூரமான - ஒரு சுரண்டல் நடவடிக்கை தொடர்பில் நீதி, நியாயம் நிலைநாட்டப்படும் சூழல் தென்படுகின்றது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட மோசமான அநீதிகளில் ஒன்றை இந்த ஆட்சித் தரப்பு பகிரங்கமாக ஒப்புக்கொண்டு நீதி செய்ய முற்படுவதாக இப்போது தகவல் வெளிப்படுத்தி இருக்கின்றது.

உள்ளூராட்சி தேர்தலில் தமக்கு வரக்கூடிய மோசமான பின்னடைவை சமாளிப்பதற்கான நகர்வாகக் கூட இது இருந்தாலும், இப்போதாவது உண்மையைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் நிலைமைக்கு அரசு வந்திருக்கின்றது என்பது வரவேற்கத்தக்கதே.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலங்களை அவற்றின் அசல் உரிமையாளர்களுக்கு விடுவிக்க வனப் பாதுகாப்புத்துறை திட்டமிட்டுள்ளதாக பிரதி அமைச்சர் டாக்டர் சுசில் ரணசிங்க தெரிவித்திருக்கிறார்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் அடிக்கடி எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் இராணுவம் மற்றும் அரசுத் துறைகளால் அவர்கள் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதும் அடங்கும்.

உள்ளூர் சமூகங்களுடன் முறையாகக் கலந்தாலோசிக்காமல் கூகிள் வரைபடத்தைப் பயன்படுத்தி வன இருப்பு எல்லைகளைக் குறித்தமையால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒரு பெரிய பிரச்சினை எழுந்துள்ளது என்பதை பிரதி அமைச்சர் டாக்டர் சுசில் ரணசிங்க பகிரங்கமாக ஒப்புக் கொள்கின்றார்.

இதன் விளைவாக, மக்களுக்குச் சொந்தமான பெருமளவு நிலங்கள் வன இருப்புகளாகத் தவறாக வரையறுக்கப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

“சுற்றுச்சூழல் அமைச்சகம், மாகாண ஆளுநர்கள், வனப் பாதுகாப்புத் துறை மற்றும் நில ஆணையர் நாயகம் துறை உள்ளிட்ட அனைத்து பங்குதாரர்களுடனும் நாங்கள் முதற்கட்ட கலந்துரையாடல்களை நடத்தினோம். இந்தக் கலந்துரையாடல்களின் போது, வனப் பாதுகாப்புத் துறையால் கையகப்படுத்தப்பட்ட இரண்டரை லட்சம் ஏக்கர் நிலம் மக்களிடம் மீண்டும் விடுவிக்கப்படும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. வன இருப்புக்களின் எல்லைகள் இந்த முறை அந்தந்தப் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ், கிராம அலுவலர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் உள்ளீடுகளுடன் மீண்டும் வரையப்படும்” என்று அவர் மேலும் கூறினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள நிலப் பிரச்சினைகள் கடந்த கால உள்நாட்டு மோதல்கள் மற்றும் அங்கு வசிக்கும் மக்களின் போராட்டங்களுடன் தொடர்புடையவை. மோதலின் போது பல ஆயிரம் குடும்பங்கள் தங்கள் வீடுகளையும் நிலங்களையும் இழந்தன. யுத்தம் முடிவடைந்த பல ஆண்டுகளுக்குப் பிறகும், அவற்றைத் திரும்பப் பெற அவர்கள் போராடி வருகின்றனர். பெருமளவு நிலங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் - ஆக்கிரமிப்பில் - உள்ளன. மற்றவை பல்வேறு அரசுத் துறைகளால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

தமது காலாதி கால - பூர்வீக - தாயகத்தின் விடுதலைக்காகவும் மீட்புக்காகவும் போராடி வரும் தமிழினம் பல இடங்களிலும் தங்கள் தனிப்பட்ட சொந்த நிலத்தை பேரினவாத ஆக்கிரமிப்பிடம் இருந்து மீட்டெடுப்பதற்கும் தொடர்ந்து போராட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களில் கணிசமானோருக்கு இப்போதைய செய்தி நிச்சயம் மன ஆறுதலைத் தரும் என நம்பலாம்.



# பஹல்காம் தாக்குதலுக்கான பதிலடியில் முப்படைகளுக்கு முழுமையான சுதந்திரம்

## பிரதமர் மோடி அறிவிப்பு

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கான பதிலடி விவகாரத்தில் முப்படைகளுக்கு முழு சுதந்திரத்தை பிரதமர் நரேந்திர மோடி வழங்கியுள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

டில்லியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற உயர் மட்ட குழு கூட்டத்தில் இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மோடி தலைமையில் டில்லியில் செவ்வாய்க்கிழமை உயர் மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைகளின் தலைமை தளபதி அனில் சவுகான், இராணுவ தளபதி உபேந்திர திவிவேதி, கடற்படை தளபதி தினேஷ் கே திரிபாதி, விமானப் படை தளபதி அமர் பிரீத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோர் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில், பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாகவும், அதற்கு தகுந்த பதிலடி கொடுப்பது குறித்தும் விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது.

அப்போது, பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி நடவடிக்கையை எந்த வகையில், எப்படி, எப்போது மேற்கொள்ளப்பட வேண்டும் என அனைத்தையும் இராணுவம் தீர்மானிக்கலாம் என பிரதமர் மோடி கூறியுள்ளார் என தகவல் வெளியாக்கியுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிராக உரிய பதிலடி கொடுப்பதில் நமது தேசம் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது என்றும் தேசத்தின் ஆயுதப் படைகளின் தொழில்முறை திறன் சார்ந்து தனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது என்றும் பிரதமர் மோடி கூறினார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கான பதிலடி விவகாரத்தில் முப்படைகளுக்கு முழு சுதந்திரத்தை பிரதமர் நரேந்திர மோடி அளித்துள்ளார் என பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் விவகாரம் தொடர்பாக, கடந்த 23 ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. அப்போது, சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்திவைப்பு, பாகிஸ்தானியருக்கான விசா ரத்து, அட்டாரி எல்லை மூடல், பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றிய பாதுகாப்பு அதிகாரிகள் வெளியேற்றம், இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரகத்தில் முப்படை ஆலோசகர்கள் பதவியிடங்கள் ரத்து ஆகிய 5 முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து கடந்த 24 ஆம் திகதி தலைநகர் டில்லியில் அனைத்து கட்சிகளின் கூட்டம் நடைபெற்றது. மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி உட்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர். பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிரான மத்திய அரசின் நடவடிக்கைக்கு முழு ஆதரவு அளிக்கப்படும் என்று அனைத்து எதிர்க்கட்சிகளும் கூட்டத்தில் உறுதி அளித்தன.

இந்தச் சூழலில், உயர் மட்ட ஆலோசனைக் கூட்டம் நடந்ததன் தொடர்ச்சியாக, பஹல்காம் தீவிரவாத தாக்குதல் விவகாரம் குறித்து ஆலோசிக்க பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவை இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு கூடுகிறது. இதில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, கடந்த 22 ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இந்த தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் இராணுவம், அந்த நாட்டு உளவுத் துறை இருப்பது தெரியவந்துள்ளது. இதன்காரணமாக இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் எழுந்திருக்கிறது.

ஜம்மு காஷ்மீர் பகுதியில் இந்திய இராணுவமும், மத்திய ஆயுத பொலிஸ் படையும் (சி.ஏ.பி.எப்) செவ்வாய்க்கிழமை போர் பயிற்சியில் ஈடுபட்டன. இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்டு இருக்கிறது. மேலும், ஜம்மு காஷ்மீரின் ரஜோரி மாவட்ட எல்லைப் பகுதியை சேர்ந்த கிராம மக்களுக்கு இராணுவத்தின் சார்பில் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டன. காஷ்மீரின் ஜம்மு பகுதியில் தேசிய பாதுகாப்பு படை (என்.எஸ்.ஜி) கொமாண்டோக்கள், மாநில பொலிஸார் இணைந்து பாதுகாப்பு ஒத்திகையை நடத்தினர். மேலும், இராணுவத்தின் தரப்பில் காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை என்கவுண்டர்கள் நடத்தப்பட்டன. இது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

ஜம்மு காஷ்மீரில் மீண்டும் தீவிரவாத தாக்குதல் நடத்த தீவிரவாத அமைப்புகள் சதித் திட்டம் தீட்டியிருப்பதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காஷ்மீரின் 48 சுற்றுலா தலங்கள் மூடப்பட்டு உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளியேற மறுக்கும் பாகிஸ்தானியர்களுக்கு சிறை தண்டனையை விதிக்க இந்தியா முடிவு

மத்திய அரசு விதித்துள்ள காலக்கெடுவுக்குள் இந்தியாவை விட்டு வெளியேறாத பாகிஸ்தானியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் கைது செய்யப்படுவதுடன் சிறை தண்டனையும் விதிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தான் தொடர்புடைய தீவிரவாதிகள் இராணுவ உடையில் வந்து நடத்திய தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவில் வசிக்கும் பாகிஸ்தானியர்களின் விசாக்களை மத்திய அரசு உடனடியாக ரத்து செய்தது. சார்க் விசா வைத்துள்ளவர்கள் வெளியேறுவதற்கான காலக்கெடு ஏப்ரல் 26 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. மருத்துவ விசாவில் வந்தவர்கள் வெளியேறுவதற்கான காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது.

வருகை, வணிகம், திரைப்படம், பத்திரிகையாளர், போக்குவரத்து, மாநாடு, மலையேறுதல், மாணவர், பார்வையாளர், குழு சுற்றுலா, யாத்ரீகர் மற்றும் குழு யாத்திரை உள்ளிட்ட 12 பிரிவுகளில் விசாக்களை பெற்று இந்தியா வந்த பாகிஸ்தானியர்கள் அனைவரும் ஏப்ரல் 27 ஆம் திகதியுடன்



அதாவது கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் வெளியேறியிருக்க வேண்டும்.

காலக்கெடுவுக்கு பின்னரும் இந்தியாவில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்கள் அனைவரும் கைது செய்யப்படுவர். கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி முதல் அமலுக்கு வந்துள்ள குடிவரவு மற்றும் வெளிநாட்டினர் சட்டம் 2025 இன் படி, அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்வதுடன் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அல்லது அதிகபட்சம் 3 லட்சம் இந்திய ரூபா அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக பெற்றுத்தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனேடிய பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி பெற்றது




கனேடிய பொதுத் தேர்தலில் பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான லிபரல் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

எனினும், நேற்று இரவு வரையான முடிவுகளின்படி அந்த கட்சி தனித்து ஆட்சி யமைப்பதற்கான பெரும்பான்மையை இன்னும் பெறவில்லை என தெரிவிக்கப் பட்டுள்ளது.

மார்க் கார்னியின் லிபரல் கட்சி 168 இடங்களில் முன்னிலை வகிக்கிறது எனினும், பெரும்பான்மைக்கு 172 இடங்களில் வெற்றி பெற வேண்டும்.

எவ்வாறாயினும், வாக்கெண்ணும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதால் அந்த கட்சி பெரும்பான்மையைப் பெறுமா என்பது இன்னும் உறுதியாகத் தெரியவரவில்லை என தெரிவிக்கப் பட்டுள்ளது.

கனடாவில் 2015ஆம் ஆண்டு முதல் பிரதமராக இருந்து வந்த ஜஸ்டின் ட்ரூடோ உள்நாட்டு அரசியல் பிரச்சினை, அமெரிக்க ஜனாதிபதியின் வரி விதிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கடந்த ஜனவரி மாதம் தமது பதவியி லிருந்து விலகியிருந்தார்.

இதையடுத்து, கனடா மத்திய வங்கி யின் முன்னாள் ஆளுநரும், லிபரல் கட்சியை சேர்ந்தவருமான மார்க் கார்னி புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட்டார்.

இந்தநிலையில் டொனால்ட் ட்ரம் பின் வரி தீர்மானம் மற்றும் அமெரிக்கா வின் 51 ஆவது மாநிலமாக கனடாவை இணைக்க வேண்டும் என்ற அவரது தீர்மானம் என்பவற்றுக்கு எதிராக மார்க் கார்னி வலுவான பிரசாரங்களை முன் னெடுத்திருந்தார்.

அதன்விளைவாக, எதிர்பார்த்ததை விடவும் லிபரல் கட்சி வெற்றிகளைப் பதிவுசெய்துள்ளதாக அரசியல் ஆய்வா ளர்கள் தெரிவிக்கின்றனர். தேர்தல் வெற்றிக்குப் பிறகு வெற்றிக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மார்க் கார்னி,

"தேர்தல் முடிவுகள், கனடாவை ஆதரிக் கவும் அதனை வலுவாகக் கட்டியெழுப்ப வும் மக்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். வரவிருக்கும் நாள்களும் மாதங்களும் சவாலானதாக இருக்கும். அவை சில தியாகங்களை கோரும். ஆனால் எங்கள் தொழிலாளர்களையும் எங்கள் வணிகங் களையும் ஆதரிப்பதன் மூலம் அந்த தியாகங்களைப் பகிர்ந்து கொள்வோம். அமெரிக்க துரோகத்தின் பாடங்களை கனடா மக்கள் ஒருபோதும் மறக்க வேண் டாம்." என்று வலியுறுத்தினார்.

# கனடா நாடாளுமன்றத்தில் இலங்கை தமிழர்கள் மூவர்

## ஹரி ஆனந்தசங்கரி, யுவனிதா நாதன், அனிதா ஆனந்த் வெற்றி



கனேடிய நாடாளுமன்றத்தில் முதன் முறையாக இலங்கை தமிழ் பூர்வீகத்தைச் சேர்ந்த மூவர் ஏக காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர்.

கனேடிய பொதுத்தேர்தலில் இலங்கை தமிழ் பூர்வீகத் தைச் சேர்ந்த ஐந்திற்கு மேற்பட்ட தமிழ் கனேடியர்கள் போட்டி யிட்டனர்.

இந்தநிலையில் அவர்களில் ஹரி ஆனந்தசங்கரி, யுவனிதா நாதன் மற்றும் அனிதா ஆனந்த் ஆகியோர் ஆளும் கட்சியான லிபரல் கட்சியில் வெற்றி பெற்றுள்ளனர்.

தேர்தல் முடிவுகள் வெளியாகிவரும் நிலையில் இந்த தேர்த லில் பிரதமர் மார்க் கார்னியின் லிபரல் கட்சி அறுதிப் பெரும் பான்மைக்கு குறைவான பலத்துடன் வெற்றி பெற்றுள்ளது.

இந்த தேர்தலில் ஆளும் லிபரல் கட்சியில் இருந்து இலங் கைத் தமிழ் பூர்விக தமிழ் கனேடியரும் கனேடிய நீதி அமைச் சருமான ஹரி ஆனந்தசங்கரி தனது ஸ்கார்பாரோ – கில்ட் வுட் – ரூஜ் பார்க் தொகுதியில் போட்டியிட்டிருந்தார். அதே போல ஆளும் கட்சியில் இருந்து யுவனிதா நாதனும் பிக் கரிங் – புரூக்ளின் தொகுதியிலும் களம் இறங்கியிருந்தார். முயமஎடைடந கிழக்கு தொகுதியில் அனிதா ஆனந்த் போட்டி யிட்டிருந்தார்.

இதேபோல கென்சவேட்டிவ் கட்சியில் இருந்து லயனல் லோகநாதன், நிரான் ஜெயநேசன் ஆகிய இலங்கை தமிழ் பூர்வீக தமிழ் கனேடியர்ளும் பசுமை கட்சியில் இருந்து இன்னொரு இலங்கைத் தமிழரும் போட்டியிட்டிருந்தார்.

இவர்களில் ஹரி ஆனந்தசங்கரி தனது தொகுதியில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார். இவருக்கு 34,941 வாக்குகள் கிடைத்துள்ள நிலையில் மொத்த வாக்குகளில் 63.89 சதவீதமான வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இதேபோல மார்க்கம் பகுதியில் நீண்டகாலமாக வசிப் பவரும் சில வருடங்களுக்கு முன்னரே பொதுப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தமிழ் கனடிய பெண்மணி என்ற பதிவை பெற்றவருமான யுவனிதா நாதன், 14,000 இற்கு மேற்பட்ட வாக்குகளை பெற்று மொத்த வாக்குளில் 52 வீதம் பெற்றுள்ளார்.

ப்ரோக் பல்கலைக்கழக பட்டதாரியான யுவனிதா நாதன் ஏற்கவே உள்ளூராட்சி உறுப்பினராக இருந்த நிலையில் தற்போது நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளார்.

அனிதா ஆனந்த் 28,498 வாக்குகளை பெற்று மொத்த வாக்குளில் 50.4 வீதம் பெற்றுள்ளார்.

புதிய அரசாங்கத்திலும் தற்போது நீதியமைச்சர் ஹரி ஆனந்தசங்கரிக்கு அந்த பொறுப்பு வழங்கபடும் என எதிர் பார்க்கப்படும் நிலையில் புதிய அமைச்சரவையில் சில வேளைகளில் யுவனிதா நாதன் மற்றும் அனிதா ஆனந்த் ஆகியோருக்கும் பொறுப்புகள் வழங்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த தேர்தலில் எதிர்க்கட்சியில் போட்டியிட்ட லயனல் லோக நாதன் மற்றும் நிரான் ஜெயநேசன் ஆகியோர் தமக்குரிய வெற்றிவாய்ப்புக்களை தவறிவிட்டாலும் அவர்களும் கணிச மான வாக்குகளை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக் கது.



**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.**

**இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.**

**ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.**

**10**

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



சேரிப் பிள்ளைகளுக்கான பாடசாலை கொட்டகை அமைக்க தாயாரிப்பு வேலைகள் இடம் பெறுகின்றமையையும், திறப்பு விழாவையும், கொட்டகை எரிப்பின் பின்னரும் எடுக்கப்பட்ட பழைய படங்களின் பதிவுகள்.

கத்தோலிக்க மதப் பின்னணி கொண்ட மேல் வர்க்கத் தட்டில், ஓரளவு வசதியாக வாழ்ந்த, எட்டு குழந்தைகள் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர் சித்ரா. அவரது தகப்பனார் பரிசுத்த ஆன் (St. Anne) கத்தோலிக்கப் பாடசாலையில் அவர்களது ஊரிலேயே கடமையாற்றியவர். இளம் வயதில் இருந்தே இளகிய சுபாவம் உள்ள சித்ரா, பள்ளி மாணவியாக நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது குடும்பத்தின் மேட்டுக்குடித் தொடர்புகளால் நன்றாகக் கவனிக்கப்பட்டார். ஆனால், அங்கு இருந்த வறுமைக் கோட்டில் உழன்ற நோயாளிகளில் வயது முதிர்ந்தோர், இளையோர் யாவரும் பட்ட அவஸ்தைகள் அவரை வெகுவாகப் பாதித்தன. முதியவர்கள் மலசலத்திற்குப் போகக் கேட்டாலும், இளைஞர்கள் மாத்திரைகளோ தங்களுக்கு தரப்பட வேண்டிய உணவுகள் பற்றியோ கேட்டாலோ விழுந்த ஏச்சுக்களும் பாவிக்கப்பட்ட வார்த்தைகளும் சித்ராவின் மனதை நோகடித்தன.

சமுதாயத்தின் பாரபட்சத்தை அங்கிருந்த காலங்களில் நேரடி அனுபவமாகப் பெற்று, அவரது சிந்தனை வேகம் தூண்டி விடப்பட்டது. அந்தக் காலப் பகுதிகளில் கத்தோலிக்க கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகள் – முக்கியமாக ஐரோப்பிய பின்னனி கொண்டவர்கள் கூட – தொண்டு தாதிகளாக சேவைக்கு வருவதுண்டு. அவர்கள் வியாதியஸ்தர்களிடம் காட்டிய பரிவு, பாசம் தந்த ஆறுதல்கள் சித்ராவைக் கவர்ந்தன. அவர்கள் கத்தோலிக்க மதக் கொள்கைகள், இயேசு பற்றிய துண்டு பிரசுரங்களை வியாதியஸ்தர்களிடையே விட்டுப் போவது வழக்கம். அவற்றை ஒரு வரி விடாமல் படிப்பதும் சித்ராவுக்கு ஆர்வம் தந்து, தானும் அவர்களைப் போன்ற கன்னியாஸ்திரியாக சேவை செய்ய வேண்டும் என்ற ஆசையை வளர்த்தது.

இளம் வயதிலேயே கன்னியாஸ்திரியாகும் முடிவைத் தெரிவித்த பொழுது அவரது பெற்றோர் அதனை விரும்பவில்லை. ஆயினும் அவரது திடசங்கற்பத்தைக் கண்டு, சேர்வதற்கு அனுமதி தந்தனர். பல வருடங்கள் கன்னியாஸ்திரிக்கான



படிப்புகளையும் நடைமுறை மார்க்கங்களையும் அறிந்து கொண்டு, தனது சிறிய பிராயத்திலேயே கன்னியாஸ்திரிக்கான பிரமாணங்களை எடுத்துக் கொள்ள, அவரது ஊரான கட்டுக்குருந்த கத்தோ

**தொடர்ச்சி▼**

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

லிக்க பாடசாலையில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

அந்த ஊரில் கன்னியாஸ்திரி மடத்தில் வாழ்வு. அந்த சிறிய ஊரின் கத்தோலிக்க தேவாலயம், பள்ளிக்கூடம், மறை கூடங்கள் யாவற்றையுமே சமுதாயத்தின் பெரும்புள்ளிகளே தமது கட்டிப் பாட்டில் வைத்திருந்தனர். ஆனால் அவற்றைச் சுற்றி இருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் பௌத் தர்கள். வறுமைக்கோட்டுக்கு சற்று மேலேயோ, அதிகமானவர்கள் கீழேயோ வாழ்ந்தனர்.

மடத்தில் சித்ரா மற்றவர்கள் போல அதி காலை 5.30 க்கு எழுந்து காலை பிரார்த்தனையும், தொடர்ந்து பாராயணங்களையும் முடித்துவிட்டு, தேவாலயத்திற்குக் காலைச் சேவைக்குச் சென்று திரும்பி, காலை உணவின் பின், செய்ய வேண்டிய கடமைகளை முடித்து, மதிய உணவும் அருந்திய பின் சிறிய நித்திரை இளைப்பாறல் எடுப்பது, அதன் பின் மக்களுக்கான சேவைகளுக்காக கன்னியாஸ் திரி மடத்தின் ஒரு பகுதி திறந்திருக்கும். அங்கே வருபவர்கள் அதிகமாக வறியவர்கள். புண்ணுக்கு மருந்து கட்ட, குளிர் சளிகளாலான பாதிப்பு, சரும நோய்கள் கொண்டவர்களுக்கு மருந்து தருவது போன்ற சேவைகள் நடக்கும். இந்த நோய்களின் ஆதாரமே அவர்களது போசாக்கின்மையும் அசுத்த இடங்களில் வாழ்வதும்தான். இந்தச் சேவை முடிந்ததும், மாலை நேர சேவைக்கு தேவாலயத் துக்கு சென்று, திரும்பி, பின்னர் ஏதும் வாசித்தோ அல்லது சங்கீதம் கேட்டோ, தூங்கச் செல்வதுதான் வழமை.

இந்த வாழ்க்கை சித்திராவுக்கு பூரணத்துவம் தரவில்லை. வறுமைக்கோட்டில் வாழ்ந்து, மருந்துச் சேவைக்காக வருவோரை அவர்களது வதிவிடங் களில் சென்று சந்திக்க வேண்டும் என்று சென்று பார்த்த பொழுது, அவர்களது குச்சு வீடுகளின் நிலையும் வாழும் முறையும் அவரைப் பாதித்தன.

திரும்பியவர் தான் மூன்று வேளை சாப்பிட்டு, உறங்கி இயேசுவுக்குத் தேவாலயத்தில் மாத் திரம் சேவை செய்யப் பிறந்தவர் அல்லர், இந்த ஏழைகளுக்கான சேவையை ஏற்று, உறுதி பூண்டு அதே வழியில் கிறிஸ்துவைச் சந்தித்த இன்னும் ஒரு பாதிரியாரையும் இணைத்து பொதுமக்க ளிடம் நிதி சேகரித்து அந்தச் சேரியில் வீட்டுத் திட்டம் தொடங்கிச் செயல்பட்டார். அந்த மக்க ளின் குழந்தைகளுக்கும் பாடசாலை தவிர்ந்த நேரங்களில் ஆங்கிலம் கற்றுத் தந்தார். உயரே ஏறுவதற்கு வழியற்ற ஒருவனுக்கு ஏணியில் ஏற கைப்பிடி தருவது எவ்வளவோ மேல் என சித்ரா நினைத்து பணியாற்றியமை சில மாதங்களின் பின் மாற்றலாகி கொழும்புக்கு வரும் நிலையை உருவாக்கியது. அந்த மாற்றத்தில் அவர் மேலதி கார கன்னியாஸ்திரியாக உயர்வு பெற்றமை யால் அவருக்கு மேலும் சில மணித்தியாலங்கள் சமூகப் பணிக்காக ஒதுக்கக் கூடியதாக இருந்தது. அவருடைய சிந்தனைகளில் இயேசு கிறிஸ்துவின் போதனைகள், தத்துவங்கள் நலிந்தோருக்கு சேவை செய்வதிலேயே தங்கி இருக்கிறது, கன்னியாஸ் திரி மடத்தில் மூன்று வேளை உணவுடன் பாடசா லையில் படிப்பித்து வந்து ஆறுதல் பெறுவது அல்ல என்பது மேலும் மேலும் திடமாகியது. அவரது கன்னியாஸ்திரி மடத்துக்கு அருகாமையான மாளிகாவத்தையில் அமைந்திருந்த சேர் பாரன் ஜெயதிலக பள்ளிக்கு அந்தப் பகுதியில் வாழும் சேரிப் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ளுமாறு பரிந்துரை செய்த போதும், அதிகாரிகளால் அது மறுக்கப்பட்டது. சித்ரா தானாகவே சென்று அந்தக் குழந்தைகளுக்கு மாலை வகுப்புகள் நடத்தினார். இதில் அங்கிருந்த பெற்றோரும் பகுதியில் வாழ்ந்த இளைஞர்களும் ஆர்வம் காட்டியமையால், அவர்கள் யாவரும் சேர்ந்து சேர் பாரன் ஜெயதிலக பள்ளிக் கூடத்தின் அருகாமையில் இருந்த வெற்றுக் காணியில் தென்னோலைகளால் வேயப்பட்ட குச்சுக் கொட்டைகளில் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தனர்.

தொடக்க நாளில் பெற்றோர்கள் வெள்ளை அரிசி பொங்கல் செய்து, பலகாரங்களும் பரி




மாறி, ஆனந்தமாக சிறுவர்கள் பள்ளி சேர்வ தில் மகிழ்ந்தனர். மூன்று கிழமை மகிழ்ச்சியா கப் பள்ளிக்கூடம் நடந்தது. நான்காவது வாரத் தின் தொடக்க நாள் பள்ளிக்கூடம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, கொழும்பு மாநகர சபை ஊழி யர்கள் அந்த குச்சுக் கொட்டையும் பாடசாலையும் அரச காணியில் அத்துமீறிக் கட்டப்பட்டவை என, எந்த விண்ணப்பங்களையும் ஏற்றுக் கொள்ளா மல், பெற்றோர்கள், மாணவர்கள் முன்னிலையி லேயே அதனை அடித்து, நொறுக்கி, எரித்தார்கள். இதில் மாணவர்களின் தளவாடங்கள் கூட விட்டு வைக்கப்படவில்லை.


சமுதாய வர்க்க வேறுபாடுகளின் கூர்மையை சித்ரா அன்று அனுபவப்பட்டு, அதிகார வர்க்கத் துடனும் திருச்சபையுடனும் கூட முரண்பட்டார். அவரது விரக்திகளையும் ஏமாற்றங்களையும் உணர்ந்த திருச்சபை ஆசியாவின் மதங்களின் கூட்டம் (Asian Meeting Of The Religious - AMOR) என்று அந்த வருடம் கொழும்பில் நடந்த கூட்டத்தில் சித்ராவை அவரது சேரிப் பள்ளிக்கூட அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளக் கேட்டார்கள்.

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

இதற்காக சித்ரா சமர்ப்பணம் ஒன்று பங்கு பற்றும் பிரதிநிதிகளுக்காகச் செய்ய வேண்டி இருந்தது. அந்தச் சமர்ப்பணத்தில் சித்ரா திருச்சபைகளின் தலைமை பீடங்கள், இயேசு கிறிஸ்து வாழ்ந்து, வழிகாட்டிய நெறிகளில் வாழ வில்லை, அதற்கான தலைமைத்துவம் தருபவர்கள் அல்லர், பாமர – வறுமைக்கோட்டின் கீழே வாழும் மக்களின் சிந்தனையையும் தேவைகளையும் ஆதங்கங்களையும் அவர்கள் வாழும் நிலங்களுக்கு இறங்கி வந்து பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டும், அதை விட்டு தங்களது உயர் பீடங்களில் இருந்து கொண்டுபார்க்கமுனைந்தால்உணர்வுகளைப்புரிந்து




கொள்ள முடியாது, அந்த சேவைக்கு நீங்கள் யாவரும் சேரிக்கு வந்து அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார். இயேசு கிறிஸ்து இங்கு எம்மிடையே இருந்தால் அவர் எங்களை பார்ஸ ிகளாகவும் ீரயசளைநநள) அல்லது ‘வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறை எப்படி வெளியில் அழகானதாகவும் உள்ளே அசுத்தமாகவும் இருக்கிறதோ’ அதேபோன்ற வெளிவேடக்காரராகவோ அன்றில் பாசாங்கு பண்ணுபவர்களாகவோதான் பார்ப்பார் என்று ஆழமாக கூறிய போது, மொழிபெயர்ப்பாளர் அந்த உரைகளை சுருதி குறைத்தே கூறினார்.

திருச்சபைக்கு இவை திருப்தி தரவில்லை. இடையில் சித்ரா ஜே.வி.பி. மேடைகளில் கன்னியாஸ்திரி உடையை மாற்றி, விடுதலை கீதங்கள் பாடுவதும், அங்கத்தினருடன் ஈடுபாடுகள் கொள்வதும் புலன் விசாரணையாளர்களால் மேலிடத்துக்கும் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டன.

ஜே.வி.பி. அங்கத்தினர்களை அவர் சந்தித்திருந்தமையால் இப்படியான அடக்குமுறைகளை இல்லாததாக்கி, ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதே தங்களது நோக்கம் என்ற தத்துவங்களும் ஓதப்பட்டு அவர் இருதலைக்கொள்ளி எறும்பானார். ஜே.வி.பியின் வர்க்கப் போராட்டத்திற்கான கொள்கைகள், லயனல் போபகேயில் இருந்த ஈர்ப்பு சித்ராவை கொழும்பு மகஸின் சிறையில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த ஜே.வி.பியின் பெண் அங்கத்தவர்களை சந்தித்துத் தேவையான உதவிகள் செய்யுமாறு அவர் கேட்டபோது அவர்களைச் சந்தித்ததில் கேட்டறிந்த கொடுமைகளில் மனம் வெந்து, இவர் படிப்படியாக கன்னியாஸ்திரி மடத்திலிருந்து வெளியேறி, லயனல் போபகேயை மணம் முடித்து கட்சி கோட்பாடுகளுக்கு இணங்கி நடந்தார்.

சித்ரா இடதுசாரியோ மார்க்ஸீய, லெனினிஸ தத்துவவாதியோ அல்லர். அவர் மார்க்கத்தினாலும் மனதினாலும் மனிதநேயத்தை அனுசரித்தவர்.

தனது தாங்கிக் கொள்ள முடியாத மன அழுத்தங்களால் லயனல் போபகே வரைந்து வரைந்து கிழித்து எறிந்த கடிதங்களைக் கண்டும் அவரால் அதன் காரணங்களையோ, அரசியலையோ புரிந்து கொள்ள முடியவில்லை. அவரது ராஜினாமாவை மனைவியாக ஏற்றுக் கொண்டு, பின் தன்னந்தனியாக இரண்டு சிறிய குழந்தைகளுடன் அகதியாக ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டார். இதற்கு முன்னரே பாதுகாப்புக் காரணங்களுக்காக லயனல் போபகே வதிவிடம் தேடி ஜப்பான் சென்று, பின் தென்கொரியாவில் வசித்து, பின்னர் ஒரு வழியாக ஆஸ்திரேலியா வந்து மனைவியுடன் இணைந்தார்.


Catholic Action இன் உந்து சக்தியாக லயனல் போபகேயைக் கட்சியிலிருந்து பிரிப்பதற்குத் துணை போனீர்களா என கேட்டால் சித்ரா சிரித்துக்கொண்டு தரும் பதில் “நான் சிறுமியாக ஆஸ்பத்திரியில் படுத்த வேளைகளில் எங்களது தாதியர்கள் எப்படிக் கடமைகளைப் புறக்கணித்தார்கள், ஏழை எளியவர்களை வாடவிட்டு, அவர்களுக்குத் தரப்பட்ட உணவுகளை வீட்டுக்குக் கொண்டு சென்று ஊழல் செய்தார்கள் என்பதையும், கத்தோலிக்க கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகள் தந்த பரிவையும் பாசத்தையும் கண்டவள். அந்தப் பரிவையும் பாசத்தையும் கூட இந்த ஊழல் பெருச்சாளிகள் அப்பொழுது ஊயவாழடைஉ யுஉவழைெ என்றுதான் வர்ணித்தார்கள்” என்பார்.

ஊடான் பெர்னான்டோ என்ற லண்டனில் வதியும் ஆவணப்பட தயாரிப்பாளர் லயனல் போபகே பற்றியும் சித்ரா குறித்தும் இரண்டு ஆவணப்படங்களைத் தயாரித்து வெளியிட்டார். ‘லயனல் போபகேயின் கதை’ (Lionel Bopage‘s story) எனவும், ‘கன்னியாஸ்திரியாகவே’ (Nun Other Than) என்ற தலைப்பு கொண்டவை இலத்திரனியில் ஊடகங்களில் இருக்கின்றன. ஆர்வமுள்ளவர்கள் இவற்றைப் பார்த்து மேலும் புரிதல் கொள்ளலாம்.

(தொடரும்)

# சுமந்திரனின் செயற்பாடுகள் குறித்து மூத்த அரசியல் தலைவரின் திறனாய்வு

## தமிழரசின் முன்னாள் செயலரும், முன்னாள் எம்.பியுமான துரைராசசிங்கம் தமிழ் மக்களுக்கு எழுதும் ஒரு கடிதம்





**நண்பனுக்கோர் நன்மடல்**

அன்புள்ள நண்பா,

நீ ஒரு மூத்த போராளி. 1977 தொடக்கம் 18 மே 2009 வரை ஒரே இயக்கத்தில் இயங்கிய பல்துறை செயற்பாட்டாளன். கடந்த 21 செம்டெம்பர் 2024 அன்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அதற்கு முன்னதாக வடக்கு கிழக்கில் ஒரு பொது வேட்பாளரை நியமிக்கும் விடயம் வெகுவாகப் பேசப்பட்டு, ஒருவர் நிறுத்தவும்பட்டார். "இது ஒரு பைத்தியகாரச் செயல்" என்று நீ குறிப்பிட்டாய். குறித்த வேட்பாளரிடமும் இது பற்றிக் கூறியதாகக் கூறினாய். ஆனால், தேர்தல் களம் முற்றிய போது, நீயும் சங்குடன் சங்கமானாய்.

பின்வரும் விடயங்களையும் சற்றுக் கவனி. இவை இன்றைய நம் அரசியற் களத்தை பட்டை தீட்டிப் பார்க்கும் முயற்சி. அதனாற்தான் நம்மோரால் அதிகம் விமர்சிக்கப்படும் ஒருவர் இதன் விடயப் பொருள் ஆகின்றார். அவர்தான் சுமந்திரன்.

சுமந்திரன், 2010 இல் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட பின் தமிழர் அரசியலில் ஒரு முழு நேர இயங்குநிலை உறுப்பினராகச் செயற்பட்டு வருகின்றார். இதற்கு முன்பே தமிழர்தம் அரசியல் தொடர்பில் செயற்பட்டவர் அவர்.

2007 இல் கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் இரவோடு இரவாக பேருந்துகளில் ஏற்றப்பட்டார்கள். அன்றிரவே வவுனியா காட்டுப் பகுதியில் இறக்கப்பட்டார்கள். இது தொடர்பாக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைச் சமர்ப்பித்தார் சுமந்திரன். "அவ்வாறு செய்வதும் மீறலே என்றும், ஏற்றிய இடத்தில் மீண்டும் விடுமாறும்" தீர்ப்புக் கிடைத்தது. 1994 களில் நீலன் திருச்செல்வம் அவர்களின் பரிந்துரையின் பேரில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பேராளராக நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டவர் இவர்.

தனது எட்டு வயதில் தன் தந்தையாருடன் நாடாளுமன்றம் சென்று தந்தை செல்வாவின் உரைகளை அவதானித்தவர். இதே காலப்பகுதியில் காசி, வண்ணை பேன்ற 40 இளைஞர்கள் சிறையில் வாடினர். அப்படி அவர்கள் சிறையில் வாடிய நாள்களை எரியும் மெழுகுதிரியின் பக்கத்தில் குறிப்பிட்டு வெளிவந்த சுதந்திரன் பத்திரிகையை தனது வீட்டில் வாசித்ததை நினைவுகூர்பவர் அவர். 2010 தொடக்கம், பருத்தித்துறை தொடங்கி பொத்துவில் வரை ஓடி ஓடிப் பணியாற்றி வருபவர்.

2009 இல் போர் முடிந்த கையோடு தமிழர் அரசியல் கையறு நிலை ஆனது. 2010 மற்றும் 2011 களில் பயங்கரவாதத்தைத் தோற்கடித்த நாடு என்ற பட்டை நாமத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் இலங்கைக்குச் சூட்டியது. புலம்பெயர் உறவுகளும், நாடுகடந்த தமிழீழம் அமைப்பினரும் கையைப் பிசைந்து கொண்டிருந்தார்கள்.

சுமந்திரன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்குச் சென்றார். இராஜாங்கச் செயலாளர் றொபர்ட் பிளக்கைச் சந்தித்தார். குடிமக்களின் பாதுகாப்புக்கான பொறுப்பு (Responsibility To Protection) என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் இலங்கை அரசை ஏன் பொறுப்புக் கூறும்படி செய்ய முடியாது? எனக் கலந்துரையாடினார். இராஜாங்கத் திணைக்களம்...., "உங்கள் தலைவர் மூலம் எமக்கு சமர்ப்பணம் வழங்குங்கள் பார்ப்போம்" என்றது. சுமந்திரன் சம்பந்தன் ஐயாவை அழைத்துச் சென்றார். சமர்ப்பணம் வழங்கினார் ஐயா. இராஜாங்கத் திணைக்களம் கிறங்கிப் போனது. "தக்கது செய்வோம் சென்று வாருங்கள்" என அனுப்பி வைத்தது அது. இதனால் தானே 2012 இல் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கைக்கு எதிரான பிரேரணை வந்தது. 2015 இல் இப்பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்குவதாக அறிவிக்கச் செய்ததும், ஐயாவோடு சேர்த்து சுமந்திரன்தானே.

2015 இல் வடமாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. முதலமைச்சர் வேட்பாளராக சீ.வி. விக்னேஸ்வரனை நிறுத்த சம்பந்தன் ஐயா விரும்பினார். அதனை சாத்தியமாக்கினார் சுமந்திரன், மாகாணச் செயலாளர் தோதாகவில்லை என்றார் விக்கி. ஏற்ற ஒருவரை நியமிக்கச் செய்தார் சுமந்

தொடர்ச்சி ▼

# சுமந்திரனின் செயற்பாடுகள் குறித்து மூத்த அரசியல் தலைவரின் திறனாய்வு

தொடர்ச்சி▲

திரன். எனினும், மாகாணச் செயற்பாட்டை வெற்றிக் கம்பத்துக்கு இட்டுச் செல்லவில்லை விக்கி என்பது நீ அறிந்ததே. அது எமது துரதிஷ்டம்.

வடமாகாணசபைத் தேர்தல் தொடங்கிய கையோடு தமிழ் அரசுக் கட்சி பிரிவினைவாதக் கட்சி, அதன் சமஷ்டிக் கொள்கை பிரிவினையே என்பதால் அக்கட்சியைத் தடை செய்ய வேண்டும் என கிக்கடுவ கோரலாலகே டொன் சந்திரசோம என்பவர் உயர்நீதிமன்றில் வழங்கும் தாக்கல் செய் தார். இவ்வழக்கில் எதிர்வாதம் செய்து, வென்று கட்சியைக் காப்பாற்றியவர் சுமந்திரனே அன்றோ!

2015 இல் நல்லாட்சி அரசு உருவாக சம்பந்தன் ஐயாவுடன் இணைந்து உழைத்து வெற்றி கண்ட வரும் சுமந்திரன் தானே. அவ்வாட்சிக் காலத்தில் புதிய நகல் அரசமைப்பொன்று உருவாக்கப்பட்டதை நீ அறிவாய் அன்றோ!

அதன் உறுப்புரை 2 பின்வருமாறு அமை கின்றது.

“இலங்கை, அரசமைப்பில் குறிப்பிட்டவாறு தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு ஏற்புடைத் தான மத்திய மற்றும் மாகாணங்களின் நிறுவ னங்களைக் கொண்டுள்ள சுதந்திரமும், இறை மையும், தன்னாதிக்கமும் கொண்ட ஏக்கிய ராஜ்ய / ஒருமித்த நாடு என்னும் குடியரசாகும்.“ என்றுள்ளது.

இதில் வரும், மத்தியில் வரும் நிறுவனங்கள் என்பவை நாடாளுமன்றத்தையும் இரண்டாம் சபையையும் குறிக்கும். இரண்டாம் சபை ஒன்பது மாகாணங்களில் இருந்து ஒவ்வொன்றுக்கும் 5... 5... ஆக நாற்பத்தைந்து மாகாணசபை உறுப்பினர்களையும், நாடாளுமன்றதால் நிய மிக்கப்படும் 10 பேரையும் சேர்த்து ஐம்பத்தைந்து பேரைக் கொண்ட சபை. இச்சபையின் அபிப் பிராயங்களைப் புறந்தள்ளி மாகாணசபை நிரல் தொடர்பில் சட்டங்கள் இயற்றப்பட முடியாது. மாகாணசபையின் அதிகாரங்களை வலுப்படுத் துவதற்காக கிரமமாக முதலமைச்சர்கள் மாநாடுகள் நடத்தும் ஏற்பாடு உள்ளதோடு ஆளுநரின் அதி காரமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இவைதானே சமஷ்டியின் அம்சங்கள். கால வரையில் செயற்பாட்டுத் திறன் மூலம் மாகாண சபையை வளப்படுத்தலாம். இதனை விளங் கிக் கொண்டும் வேண்டுமென்றே ஏக்கிய ராஜ்ய, ஏக்க ராஜ்ய ஃ ஒற்றை ஆட்சி என்று மக்களைக் குழப்புகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். ஏக்கிய ராஜ்ய என்பது ஒருமித்த நாடு என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு வெளியே சென்று அச்சொல்லுக்குப் பொருள்கொள்ள முடியாது. “அல்லது“ என்று கூட இல்லை சரிவுக் கோட்டினால் இரண்டு சொற்களும் ஒரே கருத்துடையவை என அறுதியிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட அதிகமான வழங்குகளில் முன்னிலையாகுகின்றார் சுமந்திரன். அவற்றை வென்று தருகின்றார். இதற்காக வடக்கு கிழக்கு நீதி மன்றங்கள், மேன்முறையீட்டு மற்றும் உயர் நீதிமன்றங்ககளில் எல்லாம் கட்டணங்கள் இன்றியே காரியம் ஆற்றுகின்றார்.

வழக்குகள் மூலம் அதிகமான காணிகளை விடுவிக்கச் செய்துள்ளார். சம்பூரில் மட்டும் 603 ஏக்கர் நிலத்தை விடுவிக்கச் செய்தார். பேச்சு வார்த்தைகள் மூலம் 154 அரசியற் கைதிகளை விடுவிக்கச் செய்தார். இன்னும் 99 கைதிகளின் விடுதலையை நமது சில வித்துவான்கள் தடுத்து விட்டார்கள்.

நல்லாட்சிக் காலத்தில் நம் பகுதியில் நடை பெற்ற அபிவிருத்திகள் பற்றி நன்கு அறிவாய் நீ. அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்த பாதீடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆலோசனையின் பேரில் செய்யப்பட்டதென்று பொதுஜன பெர முனவினர் கூக்குரலிடும் அளவுக்கு நிதி வடக்குக் கிழக்குக்குப் பம்பப்பட்டது. ஏன்? யாழ்ப்பாண சர்வ தேச விமான நிலையம் மும்மொழிகளில் முதல் மொழியாக தமிழைச் சூடிப் பொலிவுறுவது உனக் குத் தெரியாதா என்ன? இவற்றின் சூத்திரதாரி சுமந் திரனே என்பதை நீ மறுப்பாயா? ஏன்? பொத்து வில் தொடக்கம் பொலிகண்டி நடை பயணத்தின் வெற்றியின் கர்த்தா சுமந்திரனே. இதனை வசிஷ்டர் வாயாக சிவாஜிலிங்கமே பறைசாற்றி நின்றதை நீ அறிவாய் தானே.

முந்திய தமிழரசு, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பவற்றிலெல்லாம் இருந்த தலைவர்களைப் போல் சுயமாகச் சிந்தித்து, களநிலை கண்டு இவர் காரியமாற்றுவதை சிலர் விரும்பவில்லை. இவர்கள் மேற்குறித்த எதையுமே செய்யாதவர்கள். மேதகு தலைவரின் இடத்தை தாம் வகிப்பதாகக் காட்டிக் கொள்ள முற்படுபவர்கள்.

போராட்டத்தின் இறுதிக்கட்டத்திலே வணங்கா மண் என்ற ஆயுதக் கப்பலை அனுப்புவதாய் தலைவரையும் மக்களையும் போக்குக் காட்டி அனைவரையும் கைவிட்டவர்கள். இயக்கத்தின் சொத்துக்களை தம்வசமாக்கிக் கொண்டவர்கள்.

ஆனால் இப்போது தலைவரைக் கடவுளாய்க் காட்ட முற்படுகின்றார்கள். இவர்கள் அப்படிக் காட்ட வேண்டியதில்லை. அது மக்களுக்குத் தெரியும். இவர்களில் ஒரு பிரிவினர் தான் அண்மையில் தலைவரின் இருப்பை போலித் துவாரகா மூலம் காட்டப் புறப்பட்டவர்கள். அவர்கள் சாதாரண மானவர்களா? எவ்வளவு பெரிய மனிதர்கள்! இவர் களே இப்படி என்றால் நான் மேற்சொன்னவர்கள் எப்படிப்பட்டோராய் இருப்பர் எண்ணிப் பார்.

இன்றைய நிலையில் தலைவரின் கொள்கை எதுவாக இருக்கும், அல்லது இருக்க வேண்டும்? தேசத்தின் குரல் அன்டன் பாலசிங்கம் அவர்கள் சொன்னாரே, “நீலன் – பீரிஸ் திட்டம் வரவேற்கத் தக்கது“ என்று. அத்தகைய தீர்வு ஒன்றை நோக்கி நகர்வதுதானே தலைவரின் தற்போதைய வழிகாட்டுதலாய் இருக்கும். அவ்வாறு நகரக் கூடிய வல்லமை இன்று யாரிடம் உண்டு, சுமந்திரனைத் தவிர அதனைச் சாதிக்க வல்லார் யார்?

கனடா நாடாளுமன்றில் ஒரு பிரதிநிதியைப் பேசச் செய்து, வாக்கெடுப்பின் மூலம் தமிழீ ழம் அமைக்கவுள்ளதாய் மக்களை உற்சாகப் படுத்த முயற்சிக்கின்றார்கள். இதனை மக்கள் நம்ப வேண்டுமா?

இன்று தலைவரை தலைமேல் கொண் டாடுவோராய்த் தம்மைக் காட்டிக் கொள்ளும் புலி கள் சாரா ஏனைய இயக்கத்தினர் 2001 வரை எங்கே

தொடர்ச்சி▼

# சுமந்திரனின் செயற்பாடுகள் குறித்து மூத்த அரசியல் தலைவரின் திறனாய்வு

தொடர்ச்சி▲

இருந்தார்கள், யாருக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்பது நீ, அறியாததா?

ஏன்...? 2000ஆம் ஆண்டுத் தேர்தலின் பின் கொழும்பிலே தோற்றம் பெற்று 2001 தேர்தலிலே தலைவரின் மௌனத்தை சம்மதமாய்க் கொண்டு வெற்றி பெற்று 2002இல் தலைவரின் ஆசியைப் பெற்றுக் கொண்டது தானே கூட்டமைப்பு. அதிலிருந்து, இன்று வரை தம்மைத் தலைவர்கள் என்று கூறிக்கொள்வோரை தலைவர், தலைவர்கள் என்று ஏற்றுக்கொண்டாரா?

இதனால்தானே ரங்காவின் கேள்விக்குப் பதிலளித்த அன்டன் பாலசிங்கம் அவர்கள், "அவர்களிடம் பேட்டியெடுத்து மினக்கெட வேண்டாம், நாங்கள் சொல்லுவதைச் செய்பவர்கள் தான் அவர்கள்" என்று குறிப்பிட்டார். இதை நீ அறிவாய் எத்தனை பேர் உளர்? இவை இல்லாதோர் தானே சுமந்திரனை விமர்சிக்கின்றார்கள், பொய் புனைகின்றார்கள், புலி மறுப்பாளன் என அபாண்டம் சுமத்துகின்றார்கள். அவர் சொல்வதை தமது தேவைக்கு ஏற்றாற் போல் மாற்றி அமைத்துத் தொடர் பரப்புரை மூலம் அவரைப் பொய்யனாய் சித்துரிக்கின்றார்கள்.

தான் வன்முறைக்கு ஆதரவில்லை என சுமந்திரன் சொல்கின்றார். போராட்டம் நடந்து கொண்டிருந்த போதா இதைச் சொன்னார்? போராட்டம் முடிந்த பின் சமஷ்டியை முன் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் அறிக்கை வெளியிட்ட பின்னர் தானே சொன்னார். அது உண்மைதானே. ஏன் இந்தக் கூற்றை பின்னால் இழுத்துச் சென்று முடிச்சுப் போட வேண்டும்?




தானே?

அதிலும், கருணாவின் 03.03.2004 பிரிவு தொட்டு 2004 பொதுத் தேர்தல் முடியும் வரை மட்டக்களப்பில் கூட்டமைப்பில் போட்டியிட்டவர்கள் கருணாவுக்குத் தானே சரணம் போட்டார்கள். ஜோஸப் பரராஜசிங்கம் மட்டும் தானே கருணவின் கருத்தை ஏற்கவில்லை. அதனாற்தானே அவர் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார். தேர்தல் முடிந்த பின் கருணா முழுமையாக அரசுடன் சேர்ந்த பின்தானே இவர்கள் வன்னியின் விசுவாசிகள் ஆனார்கள்.

இவர்களும் புலம்பெயர் சிறு குழுவினர் உள்ளிட்ட நான் குறிப்பிட்ட மேற்சொன்னோரும், களமும், காலமும் அறிந்து தமிழ் மக்களின் அரசியலை முற்கொண்டு செல்லும் திறம் கொண்டுள்ளார்களா?

அரசமைப்பு சார் நிபுணத்துவம், அத்தகு நிபுணத்துவம் கொண்ட நிபுணர்தம் அறிமுகம், தகுதி கண்டு பெரும்பான்மை அரசியலாளர்களால் மதிக்கப்படும் தன்மை, இராஜதந்திர வட்டாரத்தின் அறிமுகம், நமது வேணவாக்களை தேவையான இடங்களிலெல்லாம் வைக்கச் செய்யும் நுண்மாண்நுழைபுலம் என்பன கொண்டுள்ளோர்

ஆயுதப் போராட்ட காலம் பற்றி பேசும்போது நெல்சன் மண்டேலாவின் கூற்றை அவர் மேற்கோள் காட்டுவதை எம்மவர்கள் ஏன் புரிந்து கொள்ளவில்லை. "அப்போதைய சூழ்நிலையில் வேறு வழி இருக்கவில்லை. சரியான வழி என்றுதான் வன்முறையைக் கையாண்டேன்" என மண்டேலா கூறியதை சுமந்திரன் சுட்டிக் காட்டி நமது போராட்டத்துடன் ஒப்பிட்டார்தானே.

அவருக்கு அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கியமை பற்றி ஏன் கொதிக்கின்றார்கள்? புலனாய்வுத் தகவலின் படி அது வழங்கப்பட்டது. பாதாள உலகினர் தொடர்பாய் தற்போது வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகள் இவர்களின் கண்களைத் திறக்கவில்லையா? பாதாள உலகம் என்பது கூலிக்காய் அமர்த்துவது வரை சென்று அப்பாவிகளையும் தொடுப்பது பற்றி நாம் அறிந்திருக்கவில்லையா? அதுவும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளை ஆதிக்கபுரியினர் பகடைக்காய்களாகப் பாவிக்கும் சாத்தியம் பற்றி இவர்களுக்குத் தெரியாதா என்ன?

தொடர்ச்சி▼

# சுமந்திரனின் செயற்பாடுகள் குறித்து மூத்த அரசியல் தலைவரின் திறனாய்வு

தொடர்ச்சி▲

இன அழிப்பை சுமந்திரன் மறுக்கின்றார் என்கின்றார்கள். பொதுவெளியில் சொல்லப்படும் கூற்றுப் பற்றியா அவர் குறிப்பிடுகின்றார். சட்டச் செயற்பாட்டோடு தொடர்புடைய நடவடிக்கை பற்றியே அவர் பேசுகின்றார். 1956 தொடக்கம், ஏன் 1939 தொடக்கம், தமிழர்கட்கெதிராக நடைபெற்ற வன்முறைகள் ஐக்கிய நாடுகள் சபையின் சட்ட வரையறைக்குள் வருமா? அவர்கள் இதனை எல்லைப்படுத்தும் போது ஆயுதப்படை நேரடியாக படைத்தளபதிகளின் வழிப்படுத்தலில் நடந்தவற்றைத் தானே வரையறுப்பார்கள். ஆயுத மோதல் என்ற வரையறைக்குள் வரும்போது போர்க்குற்றம் தானே பொருத்தமான குற்றச்சாட்டு. அதிலே நாம் குறிக்கும் குற்றச்சாட்டுகளின் கனதி அதை இனஅழிப்பின் எல்லை வரை கொண்டு செல்லும் அல்லவா? இதைத்தானே சுமந்திரன் சொல்கின்றார்.

உரோம் உடன்படிக்கையில் கையொப்பம் இடாத இலங்கையின் மீது இன அழிப்புக் குற்றத்தைச் சுமத்த முடியாது என்பதை அறிந்து கொண்டும், தென்சூடான் இனஅழிப்பை நிறுவ முடியாமையால் தோல்வி கண்டமையைத் தெரிந்து கொண்டும் ஏன் இந்தக் குற்றச்சாட்டு?

சமஷ்டியைக் கைவிட்டுவிட்டதாகச் சுமந்திரன் சொன்னதாகக் கதை கட்டினார்கள். இது எத்தனை அபாண்டம்... அளப்புத்தனம்!

முழுக்க முழுக்க... நசுக்கப்படும் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கவென்றே அரசியலுக்கு வந்தவர் அவர். அல்ல, அல்ல... வருவிக்கப்பட்டவர். பொருள், புகழ் எல்லாம் அவருக்கு ஏற்கனவே உண்டு. நியாயத்தை அறவழியில் பெறுவதே அவரது இலக்கு. அவர் அதிஷ்டவசமாக அரசியலுக்கு வந்தவர் அல்லதர். ஏற்கனவே குறிப்பிட்டது போல எட்டு வயதிலேயே இவ் எண்ணக்கரு அவருக்குள் ஊன்றப்பட்டு விட்டது. 2010 இல் இருந்து சம்பந்தன் ஐயாவின் பயிற்சிக்களத்தில் பயிற்சி பெற்றவர் அவர். நமது அரசியலுக்கான சகல துறைகளிலும் அவருக்குப் பயிற்சி உண்டு, அவற்றைக் கையாளும் வல்லமையும் உண்டு.

போர் ஒன்றின் பின்னரான, அதுவும் வெற்றி பெறாத தரப்பினரது அரசியலின் கடினத் தன்மை பற்றி அவர் நன்கு அறிவார். அதனைக் கையாளும் சூத்திரங்கள் அவருக்கு நன்கு தெரியும். எனவேதான் முகங்கொடுக்க வேண்டிய நெருக்குவாரங்களையெல்லாம் சகித்துக் கொண்டு அவர் பணியாற்றுகின்றார். 2024 தேர்தல் முடிந்த கையோடு தமிழரசின் தேசியப் பட்டியல் பற்றிக் குறிப்பிட்ட தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் அதனை சுமந்திரனுக்குக் கொடுப்பது பொருத்தமானது எனச் சொல்லியிருந்தார். அரசியற்குழுவின் மூவர் தவிர்ந்த அனைவருமே இதையே வலியுறுத்தினர். எனினும், சுமந்திரன் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தும், இன்றுவரை கட்சிப் பணிகளைத் தன் சொந்தச் செலவிலேயே சோடைபோகாமல் தொடர்கின்றார்.

இவர் மீது விரல் நீட்டுபவர்கள் மிகவும் பலவீனமானவர்கள். கருத்து வறுமை உள்ளவர்கள், பயந்தவர்கள். அதனால் தான் வாதம் செய்யாமல் சேறு பூசுகின்றார்கள். ஒரு பெருமகனாரைக் குறை கூறுகின்றார் எனப் பொய் புனைந்து அவர் மீது பல கோணங்களிலும் அளவற்ற மதிப்பு வைத்துள்ள அனைவரையும் ஆத்திரப்பட வைக்க முயற்சிக்கின்றார்கள். அதில் வெற்றியும் பெறுகின்றார்கள்!

ஆனால், மக்கள் இது தொடர்பில் தெளிவடைய வேண்டும். அந்த "உன்னதம்" இல்லாத போது அதனைப் பிரதியீடு செய்ய இந்த உதவாக்கரைகள் யாவர்? தமிழ் மக்களின் தற்போதைய ஆடுகளம் எது? அக்களத்தை கையாளத் தேவையான கருவிகள் எவை? அவை யாரிடம் உண்டு? சுமந்திரனிடம் அவை உண்டல்லவா? அவர் பொய் புகலாத, பூச்சாண்டி காட்டாத, ஊழலற்ற, பின்வழி செல்லாத அரசியலாளர்.

விக்கியரை நாங்கள் எவ்வாறு கொண்டாடினோம் என்பது உனக்குத் தெரியும். ஒரு நாள் நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாக இன அழிப்பு மற்றும் போர்க்குற்றம் தொடர்பாக சுமந்திரன் விக்கியருக்கு விளக்கினார். ஒரு நீதியரசர் இடத்தில் இருந்து விக்கியர் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார். இடையிடையே விளக்கங்களைக் கேட்டுத் தெளிந்தார். மாற்றுக் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. எனவே, அவரும் சேர்ந்து அதனை மக்களுக்குத் தெளிவு படுத்தியிருக்க வேண்டும். செய்யவில்லை, மாறாக அவரும் ஏனையோர்களுடன் சேர்ந்து கோவிந்தா போட்டார். இவர் எப்படி மக்களை அர்த்தமுள்ள வகையில் நெறிப்படுத்த முடியும்? கடைசியில் தவறணை உரிமம் தொடர்பில் அவர் செய்த மோசடியை அறிவாய் தானே. ஆனால், பொய்ப்பரப்புரை செய்வோர் அவருக்குப் பூச்சூட்டுகின்றார்கள்.

போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை முடிந்து விட்டது என்று சுமந்திரன் கூறுகின்றாரே என்கின்றாய்? போர்க்குற்றம் ஒன்றை நீதிப் பேராயத்தில் சமர்ப்பிப்பதற்காக... அதன் தகுதிகாண் விசாரணையைத் தான் அவர் குறிப்பிடுகின்றார். இதனை பூர்வாங்க விசாரணை என்பார்கள். அது முடிந்து விட்டது. அதற்கான சாட்சிகளை மனித உரிமைகள் ஆணையம் கண்டுபிடித்துவிட்டது. அதற்கான சாட்சிகள் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாப்பாய் வைக்கப்பட்டுள்ளன. சுமந்திரனும் அவரது துணைச்சட்டதரணிகளும் கூட பல சாட்சிகளை உரிய முறையில் பதிவு செய்து சமர்ப்பித்துள்ளார்கள்.

கலப்பு நீதிமன்றில் நீதிப்பொறிமுறை கையாளப்பட்டுப் போர்க்குற்றம் நிரூபிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார். இது உன்னை குழப்பமடையச் செய்கின்றது என்கின்றாயா? இதன் தெளிவூட்டலை மத்திய குழுவில் அவர் பலமுறை செய்துள்ளார். ஆனால் அதனை உள்வாங்கி வெளியில் சொல்வதில் எம்மவர்கள் ஏன் பின்வாங்குகிறார்கள் என்பது புரியாத புதிராகவே உள்ளது. அதுவும் அல்லாமல் அவர்களும் ஏனையோருடன் சேர்ந்து வெறுமனே முரணான அறிக்கைகளை வெளியிட்டு மக்களைக் குழப்புகின்றார்கள். இவர்களுக்கெல்லாம் தீர்வு தொடர்பில் அக்கறை உண்டா? அல்லது தீர்வு கிடைக்கக்கூடாது என்பது தான் அவர்களின் விருப்பமா? ஏனெனில் குட்டையைக் குழப்பி மீன்பிடிப்பது அவர்களின்

தொடர்ச்சி▼

# சுமந்திரனின் செயற்பாடுகள் குறித்து மூத்த அரசியல் தலைவரின் திறனாய்வு

தொடர்ச்சி ▲

வாடிக்கையாகி விட்டது. ஆனால், இதற்கென்றே தான் அவர்கள் விடுதலை இயக்கங்களிலும், பின்னர் அரசியல் நீரோட்டத்திலும் கலந்தார்கள் என்று நான் சொல்ல வரவில்லை.

தூய எண்ணத்தோடு தான் எல்லோருமே வந்தார்கள். ஆனால், அரசியல் என்பது இரண்டு தளங்களில் பணியாற்ற வேண்டிய ஒரு கட்டமைப்பு. ஒன்று மக்கள் மன்றத்தில் செயற்படுவது. மற்றையது... இலங்கையைப் பொறுத்தவரையிலே மக்கள் பலம் கொண்ட சிங்கள அரசியல்வாதிகளுடனும், அவர்களிடமுள்ள துறைசார் விற்பனர்களுடனும் செயற்படுவது. முன்னையதை நம்மில் பலர் இலகுவானதெனக் கருதுகின்றார்கள்.

தல், சிருஷ்டித்தல் என்பன இங்கு பயன்படா.

இதையே அரசியலிலும் செய்பவர் சுமந்திரன். நாம் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான வழி. எதிர்த்தரப்பினருக்கு நீதி வழங்கப்படுதல் என்பதுதான் உண்மையான சட்டவியல் (Jurisprudence). அறக் கோட்பாடும் இதுவே. இதனை எல்லோரும் கடைப்பிடிப்பார்கள் என்றால் மக்கள் குழம்ப மாட்டார்கள். அவர்கள் விளங்கிக் கொள்வார்கள். ஓரணியில் நிற்பார்கள். "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பதை 2000 ஆண்டுகளுக்கும் மேலாக திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டிருக்கும் சமூகத்திற்கு அதனைக் கடைப்பிடிப்பது ஒன்றும் அத்தனை கடினமானதல்ல.

நண்பா நான் ஒன்றை உறுதியாய்ச் சொல்வேன்.



ஏனெனில் அடுத்த தளம் அவர்களுக்கு மிக மிகக் கடுமையானது. அங்கே கையாளப்படும் விடயங்கள் சிலருக்கு அரைகுறையாக விளங்கினாலும் பலருக்கு விளங்குவதே இல்லை. விளங்கியவர்கள் கூட ஏன் வில்லங்கத்தை (சுளைம்) விலைக்கு வாங்குவான் என நினைக்கின்றார்கள். எனவே, இவர்களும் முதலாம் வகுதியினரின் இலகுவான உத்தியின்பாற் பட்டு ஊரோடு ஒத்துஓட விழைகின்றார்கள். மக்களை, போராளிகளை உற்சாகப்படுத்திக் கொண்டு வாக்கு வங்கியைத் தக்க வைக்க அது போதும். இது அவர்களது குறைபாடு இல்லை, இயலாமை. அதற்காக அவர்களைக் குறைகூற வேண்டியதில்லை.

சுமந்திரன் இதற்கு மாறானவர். நான் ஏற்கனவே குறிப்பிட்ட பின்புலன்கள் கொண்டவர். தமிழர் தம் வேணவாக்களை வென்றெடுக்க அறிவார்ந்த வழிமுறைகளைக் கையாள்பவர். அவர் ஒரு குடியியல் (Civil) சட்டவாளர். அங்கே சரியான ஆதாரங்கள் இல்லாது சமர்ப்பணங்களை சமர்ப்பிக்க முடியாது. சாட்சிகளை மிரட்டுதல், மறைத்தல், காலம் கடத்து

சுமந்திரன் புலி மறுப்பாளர் அல்லர், போராட்டத்தைக் கொச்சைப் படுத்துபவர் அல்லர், பொய் சொல்பவர் அல்லர், விலைக்கு வாங்கப்படக் கூடியவர் அல்லர். ஆனால், வணங்காமுடி. இதனை பாரதி "ஞானச்செருக்கு" என்பார். மேற்கூறியவாறெல்லாம் சரியான வழித்தடத்திற் சென்றே நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வை தமிழினம் பெற முடியும் என்னும் நம்பிக்கையில் உறுதியுடன் உழைப்பவர் அவர்.

இவருக்கு எதிராக ஏன் அந்த விமர்சனங்கள் வருகின்றன என்று கேட்கின்றாய் அல்லவா? காரணங்களைக் கூறுகின்றேன் பொறுமையாக வாசி. யாருக்கும் முதுகிலே குத்தாதவர் சுமந்திரன். காழ்ப்பு இன்றி தகுதியீனத்தை அவர் ஆதாரத்துடன் வெளிப்படுத்துவார். 2020 தேர்தலின் முன் கட்சிக்கும், தலைமைக்கும் எதிராக செய்தி வெளியிட்ட பத்திரிகை ஒன்றின் எட்டு வெளியீடுகளைச் சமர்ப்பித்தார். இதன் பத்திராதிபருக்கு வேட்பாளர் நியமனம் கொடுக்கலாமா என்று கேட்டார்.

தொடர்ச்சி ▼

# சுமந்திரனின் செயற்பாடுகள் குறித்து மூத்த அரசியல் தலைவரின் திறனாய்வு

தொடர்ச்சி▲

வங்கி நியமனம் உட்பட சில நியமனங்களை பணம் பெற்றுப் பரிந்துரை செய்த மூன்று நான்கு கோவைகளை (குடைநள) சமர்ப்பித்து, அதுவும் மாற்று மொழியினருக்கானது என்பதைத் தெரிவித்து, இன்னொருவர் தொடர்பில் இதே வினாவை எழுப்பினார்.

வேறொருவரைக் குறிப்பிட்டு, அவர் தனது சமயப் பணியின் காரணமாக தன் பதவிக் காலத்தின் அரைத் தவணைக் காலத்துக்கும் மேலாக வெளிநாட்டில் வாசம் செய்ததைச் சுட்டிக் காட்டி இதே வினாவை எழுப்பினார்.

அப்பாவித் தமிழர்களை கைது செய்வித்தல், பின் விடுவித்தல் தொடர்பில் மோசடியாகப் பணம் சம்பாதித்தமை, தேர்தல் வன்முறை தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டமை தொடர்பில் மனித உரிமை மீறல் வழக்குக்காகச் சென்று தனக்கெதிராகவே தீர்ப்புப் பெற்றமை என்பவற்றைச் சுட்டிக் காட்டி தேசியப் பட்டியல் வேட்பாளர் பட்டியல் தொடர்பில் மேற்போக்கான தன் சுட்டிக் காட்டலை மற்றொருவர் தொடர்பாகச் செய்தார்.

2024 பொதுத் தேர்தல் வேட்பாளர் நியமனத்தின் போது கட்சித் தீர்மானத்துக்கு மாறாக செயற்பட்டவர்களுக்கும், தவறணை உரிமத்துக்குப் பரிந்துரை வழங்கியோர்க்கும் நியமனம் வழங்கக் கூடாது என்றார். ஆனால், இவை எவற்றையும் பொது வெளியில் பெயர் குறிப்பிட்டு அவர் பேசியதில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித் தனியாய் நின்று, சேர்ந்து கேட்டல் பற்றி எல்லோரும் குசுகுசுத்தார்கள். அவர் பகிரங்க வெளியில் தக்க நியாயத்துடன் விளக்கினார். சம்பந்தப்பட்டவர்களுடன் நேரடியாகவும் பேசினார். அண்மையில் காத்தான்குடியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும், நான்கு சுயேச்சைக் குழுக்களும் ஒரே மேடையில் இருந்து பரப்புரை செய்யும் அதிசயம் பற்றி ஹக்கீம் பாராட்டியதை நீ அறிவாய் அன்றோ. இதுதானே சுமந்திரன் சொன்ன சூத்திரம்.

மேற்குறித்த விடயங்களில் சம்பந்தப்பட்டோர் எவரும் தமது நியாயங்களை முன்நிறுத்தாது வெறுமனே சுமந்திரன் புலி மறுப்பாளர் எனக் கூறி சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதில் என்ன நியாயம் உண்டு என நீயே சொல்.

2020 தேர்தலின் முன்பே தான் ஒரு வருடத்தில் பதவி துறப்பதாக சம்பந்தன் ஐயா சொல்லி இருந்தார். தெரிவு செய்யப்பட்ட பின் ஐயாவின் செயற்பாடுகள் விமர்சனத்துக்கு வந்த நிலையில் இரண்டரை வருடத்தின் பின் சுமந்திரன் சம்பந்தன் ஐயாவிடம் இதைச் சுட்டிக் காட்டினார். பொது வெளியில் வாய் திறக்கவில்லை. ஆனால், பேட்டியொன்றின் போது தான் சம்பந்தன் ஐயாவிடம் கேட்டுக் கொண்ட விடயத்தை அவசியம் கருதிப் பகிரங்கப்படுத்தினார். இதைத் திரித்துக் கூறி சுமந்திரன், சம்பந்தன் ஐயாவைப் பதவி விலகச் சொல்லிவிட்டாரே என பலர் கூக்குரலிட்டார்கள். எவ்வாறெனினும், அதை வெளியரங்கில் கூறியிருக்கக் கூடாது என நான் சுமந்திரனுக்குச் சொல்லி ஐயாவைச் சந்தித்து இதற்கான உங்கள் வருத்தத்தைத் தெரிவியுங்கள் என்றேன். அவர் மறுக்கவில்லை. அவ்வாறே செய்தார். அவ்வாறு செய்ததை வெளியரங்கில் பகிர்ந்து கொள்ளுமாறு நான் அவரைக் கேட்கவில்லை.

புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படாவிட்டால் அரசியலில் இருந்து ஒதுங்குவேன் என்று சொன்னாரே, ஒதுங்கவில்லையே என்கிறாய் அல்லவா? அவ்வாறு செய்ய வேண்டாம் என நாங்கள்தான் சொன்னோம். ஐயாவும் சொன்னார். உண்மையில் அரசமைப்பு தன் வடிவத்தைப் பெற்றுவிட்டது. ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் 2017 இல் ஒக்டோபர் சதி நடந்ததை நீ அறிவாய். இவ்வாறான நிகழ்வை நிலைகுலைவு (Frustration) என்பார்கள். அது நமது சக்திக்கு அப்பாற்பட்ட செயல். இந்நிலையில் அவர் சொன்னவாறு செய்ய வேண்டும் என விலியுறுத்துவது நன்நோக்கம் கொண்ட செயற்பாடு அல்ல.

கொண்டு கூட்டாக... சுமந்திரனைக் கண்டு நான் மேலே குறிப்பிட்டவர்கள் பயப்படுவதைப் போலவே நம்மை ஏய்க்க நினைக்கும் பெரும்பான்மை சமூகத்தினரும் பயப்படுகின்றார்கள். பயப்படுபவர்களால் விமர்சிக்கப்படுபவர்தான் அறவழியில் மானுடத்தை வழிப்படுத்துபவர்.

ஆகவே, சுமந்திரனின் கருத்தை வலுப்படுத்த வேண்டும். அவரது உழைப்புக்கு உரம் கொடுக்க வேண்டும். நம்மிடையே வாழ்ந்த புத்திஜீவிகளின் வழிகாட்டல்களைப் புறந்தள்ளி தீமையில் விழுந்ததைப்போல நாம் இன்னும் வீழ்ந்துவிடக் கூடாது. எனக்கு சுமந்திரனைப் புழுக வேண்டிய அவசியம் கிடையாது. எனது திறனாய்வில் அவர் இப்படித்தான் தெரிகின்றார்.

உனக்கு இதில் உடன்பாடு இல்லை என்றால் உன் ஆதாரங்களை அடுக்கு. உன் கருத்தைக் கொண்டு என் கருத்தைப் பலமிழக்கச் செய். மூன்றாந்தரக் கருத்துக்களை முன்வைக்காதே் அறிவார்ந்த நடுநிலையாளர்களின் முன்வைக்கக்கூடிய கருத்துக்களையே வை பார்க்கலாம்.

இவற்றை எல்லாம் சொல்ல ஜனாதிபதித் தேர்தலைக் குறிப்பிட்டு ஏன் முன்னுரை எழுதினாய் என நீ கேட்பது எனக்குக் கேட்கிறது. நண்பா, எல்லாவற்றையும் சரியாக விளங்கிக் கொண்ட நீயே கூட கடைசியில் சங்கு ஊதினாய் அல்லவா? அப்படித்தான் மற்றவர்களும். நான் மேற்சொன்னவை எல்லாம் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் தெரியும். ஆனால், நான் குறித்த பல்வேறு காரணங்களால் அவர்கள் - சிலரால் கையாளப்படுகின்றார்கள். இது முறையல்ல, சரியல்ல, நியாயமுமல்ல.

என் தமிழ்ச் சாதி அறவழியில் தான் நிமிரும், நிலைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. “தோள் கொடுத்தால் தமிழ்ச்சாதி அறம் சுமந்து வெல்லும், ஆள்வதுவாய் தமிழினத்தார் ஆவது மெய் அறிமின்“


நன்றி

**உன் நண்பன்,**

**அண்ணாதாசன் கி.துரைராசசிங்கம்**

# கடலால் சூழப்பட்ட தீவு நாட்டில் உப்பின் விலை கிலோ 300 ரூபா




(ந.லோகதயாளன்)

2024 ஆம் ஆண்டு 100 ரூபா விற்ற உப்பு தற்போது 300 ரூபாவாக எகிறியுள்ளதாக பாவனையாளர்கள் வினம் தெரிவிக்கின்றனர்.

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவு என்பதற்கு அப்பால் பல சிறிய தீவுகள், குடாக் கடலையும் கொண்டுள்ளது.

இவ்வாறு அதிக கடல் வளம் கொண்ட நாட்டில் உப்பின் விலையைக் கூட சீராகப் பேண முடியவில்லை என்பது பெரும் கவலையளிக்கின்ற விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

100 ரூபாவிற்கு விற்பனையான உப்பு 150 ரூபாவாக அதிகரித்த போது ஆனையிறவு உப்பளம் ஆரம்பிக்கப்பட்டால் விலை குறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவு உப்பளம் திறக்கப்பட்ட பின்பு தற்போது 300 ரூபாவாக விலை அதிகரித்தமை பெரும் ஆச்சரியமளிப்பதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# இந்திய அரசின் ஆயுஸ் புலமைப்பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரல்!

**ADMISSION 2 ALUMNI (A2A)**
**INDIAN COUNCIL FOR CULTURAL RELATIONS**

இந்திய அரசாங்கத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் ஆயுஸ் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இந்தியப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆயுஸ் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் இளமானி, முதுமாணி மற்றும் கலாநிதி கற்கை நெறிகளைத் தொடர முடியும்.

ஒவ்வொரு கற்கை நெறிகளுக்குமான தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பான விவரங்கள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் இளமாணிக் கற்கைநெறி ஒன்றுக்காக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்து கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தகமை பெற்றவர்களாகவும், யோக சாஸ்திரத்தில் கலைமாணி மற்றும் யோகாவில் விஞ்ஞானமாணி ஆகிய பட்டங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் ஏதாவது ஒரு பாடத்துறையில் தகமை பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் முதுமாணிக் கற்கைநெறி ஒன்றுக்கு விண்ணப்பிப்பவர்கள் இந்திய மத்திய மருத்துவப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய - அவ்வத் துறைகளில் இளமாணிப் பட்டத்தைக் கொண்டவர்களாகவும், கலாநிதிப் பட்டத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் இந்திய மத்திய மருத்துவப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய - அவ்வத் துறைகளில் இளமாணி, முதுமாணித் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

இத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் காலம் முழுவதற்குமான கற்கைநெறிக் கட்டணம் மற்றும் மாதாந்த மாணவர் உதவித் தொகை, தங்குமிடத்துக்கான உதவுதொகை மற்றும் வருடாந்த மானியம் என்பன வழங்கப்படும் என்றும், ஆர்வமுடையவர்கள் www.a2ascholarships.iccr.gov.in என்ற இணையத்தளத்தின் ஊடாக எதிர்வரும் ஜுன் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முதல் செயலாளர் சந்தீப் சௌதாரி அறிவித்துள்ளார்.

மேலதிக விவரங்களை 011-2421605, 011-2422788, 011-2422789 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் அல்லது eduwing.colombo@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக இந்தியத் தூதரகத்தின் கல்விப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.





# மட்டக்களப்பில் சிவராமின் நினைவுதினம்



(பழுவூரான்)

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராமின் 20 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்திப் பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியை ஒட்டி இந்நிழ்கவு நடைபெற்றது.

இதன்போது சிரேஷ்ட ஊடகவியலாளர் தராகி சிவராமின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. அத்தோடு அகல் விளக்கேற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், சிவில் சமூகத்தைச் சேர்ந்த எஸ்.சிவயோகநாதன், சுதந்திர ஊடக இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் மற்றும் மாவட்ட ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஈழத் தமிழர்களின் போராட்ட வரலாற்றில் தனியிடம் பெறத் தகுந்தவர் புஸ்பராணி

## இரங்கல் செய்தியில் சி.தவராஜா தெரிவிப்பு






ஈழத் தமிழர்களின் போராட்ட வரலாற்றில் தனியிடம் ஒதுக்கப்பட வேண்டிய புஸ்பராணி இவ்வுலகை விட்டு பிரிந்து சென்றிருக்கின்றார்.

– இவ்வாறு அண்மையில் காலமான – தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்தில், அதாவது 1970களின் ஆரம்பத்தில் – பங்குபற்றிய பெண் அரசியல் போராளி புஸ்பராணியின் மறைவை ஒட்டி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வடக்கு மாகாண சபை எதிர்கட்சி தலைவருமான சி. தவராஜா தெரிவித்திருக்கின்றார். அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:–

ஈழத் தமிழர்கள் மத்தியில் போராட்டம் பற்றிய சிந்தனை பொறியை தோற்றுவித்தவர்களுள் ஒருவர் இன்று சிந்தனையை நிறுத்தி இருக்கின்றார்.

யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி மாநாட்டில் அரங்கேற்றப்பட்ட மிலேச்சத் தனம் புஸ்பராணியின் மனதினுள் குமுறிக் கொண்டிருந்த இன உணர்வுக்கும் தமிழ் பற்றிற்கும் எண்ணெய் ஊற்றியது எனலாம்.

யாழ். கோட்டையின் ராணி மாளிகையில் அன்று செயற்பட்ட வதை முகாமில் நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, சுவரின் மறுபுறத்தில் அடைக்கப்பட்டிருந்த புஸ்பராணி பொலிஸாரின் அட்டூழியம் தாங்காமல் எழுப்பிய ஓலக் குரல், இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

பல ஆண்டுகள் மண்ணையும் உறவுகளையும் பிரிந்திருந்தாலும், உணர்வுகளை உயிர்ப்புடன் வைத்திருந்தார் என்பதை புஸ்பராணியின் அகாலம் நூல் எமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது.

இறுதிவரை வாசிப்பு எழுத்து என்று வாழ்ந்தவர், தனது போராட்ட அனுபவங்களையும் உணர்வுகளையும் தனது நூலில் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு ஒப்படைத்து சென்றிருக்கின்றார்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர்கள், குறிப்பாக அவரின் போராட்ட வாழ்விற்கு துணை நின்ற அவரின் சகோதரிகள் உட்பட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த வலிகளையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். – என்று தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.04.2025




இன்று கடினமான நாளாக இருக்கும். உங்கள் பொறுமை இழப்பீர்கள். பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களிடம் இருந்து ஒத்துழைப்பு கிடைக்காது. உங்களின் சௌகரியங்களை இழக்க நேரும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் வீட்டின் புனரமைப்பிற்கான வகையில் கட்டாய பணச் செலவு செய்ய நேரும். உங்கள் செலவுகளை திட்டமிட வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலக் குறைபாடு ஒன்றிற்காக பணத்தை செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.




இன்று உற்சாகமான நாள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக உங்கள் இயல் திறனை நிரூபித்துக் காட்டுவீர்கள். அர்ப்பணிப்புடன் பணி செய்து வெற்றி காண்பீர்கள்.

உங்களது கலகலப்பான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பண வரவு அதிகரித்து காணப்படும். தொலை தூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக உங்கள் மன நிலையும் உடல் நிலையும் ஆரோக்கியமாக இருக்கும்.




இன்று சற்று மந்தமான உணர்வுகள் காணப்படும். அதனை தவிர்த்தல் நலம். இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். கையாளக் கற்றுக் கொள்ளுங்கள்.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக பழக வேண்டும். இதனால் ஆரோக்கியமான உறவு பராமரிக்கப்பட்டு நல்லுறவு மேம்படும்.

அதிக செலவினங்கள் காணப்படுகின்றது. பணம் இழக்காமலிருக்க சாதுர்யமாக திட்டமிட்டு செலவு செய்யுங்கள்.

உங்களுக்கு கண் எரிச்சல், முதுகுவலி மற்றும் கால் வலி ஏற்படலாம்.




இன்று அதிக பொறுப்பும் பதற்றமும் காணப்படும். விவேகமான, முறையான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

பணி நிமித்தமாக பயணம் ஏற்பட வாய்ப்புள்ளது. பணிச்சுமை காரணமாக பதட்ட உணர்வு ஏற்படலாம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் வீட்டின் சீரமைப்பிற்காகவும் புனர் நிர்மானத்துக்காகவும் பணம் செலவு எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சினைகளை கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று அனைத்து விதத்திலும் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மற்றும் உறுதி காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

நீங்கள் சுறுசுறுப்பாக பணியாற்றுவீர்கள். குறைந்த நேரத்தில் விரைந்து பணிகளை ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவு ஆரோக்கியமாக இருக்கும்.

இன்று பண வரவு காணப்படும். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சீராக இருக்கும்.




உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்றுவதற்கு உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

இன்று கடினமான வேலைகளையும் எளிதாக ஆற்ற முடியும். பணி நிமித்தமான பயணம் காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதன் காரணமாக உங்கள் துணை உங்களை நன்கு புரிந்துகொள்வார்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் லாபகரமானதாக இருக்கும் என்பதால் அதில் பங்கு கொள்ளலாம்.




நீங்கள் செய்த தவறுகளை இன்று சரி செய்ய வேண்டும். உங்கள் செயல்களை முறையாக ஏற்பாடு செய்து ஒரு கட்டுப்பாட்டோடு செய்யுங்கள்.

உங்கள் பணிகளை பொறுமையுடனும் உறுதியுடனும் ஆற்ற வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் பிரியமானவரின் வார்த்தைகள் உங்களை காயப்படுத்துவதாக உணர்ந்து சோர்வு கொள்வீர்கள். சகஜமாக அணுகுவது மகிழ்ச்சியான உறவுக்கு நல்லது.

இன்று செலவுகள் அதிகரிக்கக் காண்பீர்கள். அதற்கு தகுந்தால் போல பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

தேவையற்ற கவலைகள் மற்றும் தோல் எரிச்சல் காரணமாக நீங்கள் தூக்கத்தை இழப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.04.2025




இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டும். திட்டமிடுதலும் முயற்சியும் இன்று மிகவும் தேவை.

அமைதியாக இறைவழிபாட்டில் ஈடுபட்டு உங்கள் பணிகளை ஆற்றுங்கள். அதனால் வெற்றியும் நல்ல பெயரும் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படாதீர்கள். நட்பாக அணுகி கலகலப்பாக பழகுங்கள்.

அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம். இன்று சிறந்த முறையில் பணத்தை கையாள இயலாது.

காய்ச்சல் சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படலாம்.




இன்றைய நாளை உங்களின் சுய மேம்பாட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

இன்று பணிகள் விருப்பமானதாக இருக்கும். என்றாலும் வெற்றி பெறுவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

உங்களிடம் காணப்படும் புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க அது உதவும்.

நீங்கள் இன்று ஆரோக்கியமாக நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




உங்களிடம் போதிய தைரியம் காணப்படும். உங்கள் முயற்சிகள் நல்ல பலன்களை அளிக்கும். பயணம் மேற்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் பணியும் மூலம் வெற்றி கிடைக்கும். உங்கள் ஆற்றல் உங்களுக்கு தெரிய வரும் நாள் இது. உங்களிடம் இன்று தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் அன்யோன்யமாய் இருப்பீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடியாக காணப்படுவீர்கள்.

பணப்புழக்கம் இன்று திருப்திகரமானதாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகை போன்ற கூடுதல் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்வீர்கள். என்றாலும் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

பணியில் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். தொழில் சார்ந்த அணுகுமுறையால் பணிகளை சரிவர ஆற்ற இயலும்.

உங்கள் துணையிடம் உங்கள் கருத்துகளை வலியுறுத்துவீர்கள். நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் நலம்.

பண வரவும் செலவும் காணப்படுகின்றது. எதிர்காலத்துக்காகப் பணத்தை சேமிக்க வேண்டும்.

உங்கள் சொந்த வளர்ச்சி குறித்த மனக் குழப்பம் காரணமாக பதற்ற உணர்வுடன் காணப்படுவீர்கள்.



# மட்டு. கரடியனாற்றில் ஆயிரம் ரூபா லஞ்சம் வாங்கிய பொது சுகாதார பரிசோதகர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டு. கரடியானாறு பகுதியில் கடை ஒன்றிற்கு அனுமதிப் பத்திரம் வழங்க 6 ஆயிரம் ரூபா லஞ்சமாக வாங்கினார் எனக் கூறப்படும் பொது சுகாதார பரிசோதகர் ஒருவரை நேற்று செவ்வாய்க்கிழமை மாறுவேடத்தில் இருந்த லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினர் சுற்றிவளைத்துக் கைது செய்துள்ளனர் என அந்தப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் உணவுக் கடை ஒன்றை அமைப்பதற்காக கரடியனாறு சுகாதாரப் பிரிவில் கடமையாற்றிவரும் பொது சுகாதார பரிசோதகர் ஒருவரிடம் கோரிய போது அவர் லஞ்சமாக 6 ஆயிரம் ரூபாவைக் கோரியுள்ளார்.

இதனையடுத்து கடை உரிமையாளர் கொழும்பிலுள்ள லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்தார். அவர்களின் வழிகாட்டலில் நேற்றுப் பகல் 12.00 மணியளவில் கரடியனாறு பகுதியில் வீதியில் லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினர் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன் போது மோட்டார் சைக்கிளில் சென்ற பொது சுகாதாரப் பரிசோதகர் கடை உரிமையாளரிடம் லஞ்சமாக 6 ஆயிரம் ரூபாவை வாங்கிய நிலையில் அங்கு மாறுவேடத்தில் காத்திருந்த லஞ்ச ஒழிப்புப் பிரிவினர் சுற்றிவளைத்து அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் 54 வயதுடையவர் எனவும், இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனவும் லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.